# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 13 வெள்ளிக்கிழமை (28-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:175


# பிரிட்டிஷ் எம்.பிக்கள் மூலம் புலிகளுடன் பேசுவதற்கு றொனி டி மெல் முயற்சி!

## தீர்வுத் திட்டத்தைக் கையளிப்பதற்கு

கொழும்பு.ஜூலை28

**இப்போது பிரிட்டனில் தங்கியுள்ள முன்னாள் நிதி அமைச்சர் றொனி டி மெல், அந் நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் பேச்சு நடத்துவதற்கு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அறியப்படுகின்றது.**

**மிகக் குறிப்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை சந்தித்து அரசாங்கம் தயாரித்துள்ள தீர்வு யோசனையைக் கையளிப்பதே இந்த முயற்சிகளின் நோக்கம் என்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.**

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கு, இம்மாத முற்பகுதியில் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணையை, ஐக்கிய தேசியக் கட்சி எம்.பியாக இருந்து கொண்டு றொனி டி மெல் ஆதரித்து வாக்களித்தார்.

இதனைத் தொடர்ந்து அவர் அரசாங்கத்தில் சேர்ந்து கொள்வார் என்றும், அவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்பட உள்ளதாகவும் செய்தி

(12ஆம் பக்கம் பார்க்க)



## பாடசாலைகள் இன்று விடுமுறை

யாழ்ப்பாணம்,ஜூலை28

இரண்டாம் தவணை விடுமுறைக்காக பாடசாலைகள் அனைத்தும் இன்று வெள்ளிக்கிழமை மூடப்படுகின்றன. அடுத்த தவணை ஓகஸ்ட் 28 ஆம் திகதி ஆரம்பமாகும். (இ-28)

## சந்திரிகா - அன்ரன் பாலசிங்கம் சந்திப்புச் செய்தி வெறும் புரளி

### வெளிவிவகார அமைச்சு மறுப்பு

லண்டன்,ஜூலை28


மருத்துவச் சிகிச்சைக்காக லண்டன் வந்துள்ள இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்திப்பதற்கு திரை மறைவு முயற்சிகள் நடைபெறுவதாக இங்கு தமிழ வட்டாரங்களில் ஊகம் தெரிவிக்கப்படுகின்றது.

அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தங்கியுள்ளதால் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவரைச் சந்திக்க ஜனாதிபதி விரும்புவார் என்று அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் இப்போது லண்டனில் தங்கியிருப்பதால் திரை மறைவு முயற்சிகள் சாத்தியம் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால் இதனை வெறும் அரசியல் புரளி என்று கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சு அதிகாரி மறுத்தார். ஜனாதிபதிக்கு அத்தகைய நோக்கம் எதுவுமில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

(அ-3-7)



**யாழ்ப்பாண மக்கள் இப்போது தமக்கிடையே பரவலாகப் பேசிக் கொள்வது பல்குழல் எறிகணைச் செலுத்தி குறித்துத்தான். யாழ். நகரத்தில் வசிக்கும் மக்களுக்கு மட்டுமன்றி குடாநாட்டின் எல்லா இடங்களிலும் அந்த இயந்திரத்தின் வித்தியாசமான சத்தம் கேட்கிறது. அதனால் அந்த இயந்திரத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் மக்களுக்கு.**

**அரசாங்கத் தொலைக்காட்சிச் சேவையான ரூபவாஹினி அண்மையில் தன்து நிகழ்ச்சி ஒன்றில், பல்குழல் எறிகணைச்செலுத்தியை வடக்குப் போர் முனையில் படையினர் எவ்வாறு இயக்குகிறார்கள் என்பதனை ஒளிபரப்பியது. ஆனால் யாழ். குடாநாட்டில் எல்லோரும் அதனைப் பார்த்திருக்க மாட்டார்கள்.**

**யாழ்.மக்களின் ஆர்வத்தை நிறைவு செய்கிறது இந்தப் படம். செக். குடியரசின் தொழிற்சாலை ஒன்றில் எடுக்கப்பட்ட பல்குழல் எறிகணைச் செலுத்தியின் (MBRL) தோற்றத்தையே இங்கு காண்கிறீர்கள்.** *(நன்றி: சண்டே ரைம்ஸ்)*

## "சிற்றி ஒவ் றிங்கோ"வுக்கு செவ்வாய் தொடக்கம் செஞ்சிலுவை வழித்துணை

யாழ்ப்பாணம்ஜூலை28

திருகோணமலைக்கும் வடபகுதிக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் "சிற்றி ஒவ் றிங்கோ" கப்பலுக்கு எதிர்வரும் செவ்வாய்க் கிழமை முதல் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்கவிருக்கின்றது.

இந்தக்கப்பலுக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்குவது தொடர்பாக இலங்கை அரசு, விடுதலைப்புலிகள்,செஞ்சிலுவைச்சர்வதேசக்குழு ஆகிய முத்தரப்புக்கும் இடையில் எட்டப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம் இந்த வழித்துணை வழங்கப்படவிருக்கின்றது.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொடி பறக்க விடப்படுவதுடன அந்த அமைப்பின் பிரதிநிதி ஒருவரும் அதில் பிரசன்னமாக இருப்பார்.

இதன் மூலம் கப்பல் பயணநேரம் குறைவதுடன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பகுதிநேர ஆசிரியர் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

நீண்டகாலம் பகுதிநேர ஆங்கில ஆசிரியராகக் கடமையாற்றும் தமக்கு நிரந்தர ஆசிரிய நியமனம் வழங்கக் கோரி யாழ். வலயக் கல்விப் பணிமனை வளாகத்தில் நேற்று ஒன்று கூடிய பகுதிநேர ஆங்கில ஆசிரியர்கள் அமைதியான முறையில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

கடந்த திங்கட்கிழமை வடமராட்சி வலயக் கல்விப் பணிமனையில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களால் நடத்தப்பட்ட போராட்டத்தின் தொடர்ச்சியாகவே நேற்றைய போராட்டம் இடம்பெற்றது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்தப் போராட்டத்தில் எழுபதுக்கும் மேற்பட்ட பகுதிநேர ஆசிரியர்கள் கலந்துகொண்டனர். (இ-9-10-51)

## வவுனியாவில் நேற்று பகிஷ்கரிப்புப் போராட்டம் பாடசாலைகள் அனைத்தும் ஸ்தம்பிதம்

வவுனியா,ஜூலை28

கடந்த 16ஆம்திகதி கைது செய்யப்பட்ட வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த மகா வித்தியாலய மாணவனான முத்துசாமி முகுந்தசுதனை விடுவிக்குமாறு கோரியும் -

யாழ். இந்துக்கல்லூரி மாணவன் சோ.சஞ்சீவன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும் - வவுனியா மாவட்டப் பாடசாலை மாணவர்கள் நேற்று வகுப்புக்களைப் பகிஷ்கரித்தனர்.

இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் காரணமாக சகல பாடசாலைகளும் செயலிழந்து இருந்தன.

பாடசாலைகளில் ஆசிரியர்கள் மட்டுமே சமுகமளித்திருந்தனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

அங்கம் 6

உள்ளே!

மேலதிக வினாத்தாள்கள் தேவைப்படுவோர் உதயன் அலுவலகத்தில் இரண்டு ரூபா செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

## இடத்துக்கிடம் மாறுபடும் தொலைபேசிக் கட்டணம்

### பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்ப்பாணத்துக்கும் - வெளி இடங்களுக்குமிடையிலான தொலைபேசிச் சேவை ஓரளவு சீரடைந்து வரும் வேளையில் -

தனியார் தொலைத்தொடர்பு நிலையங்களில் பொதுமக்களிடம் இருந்து இடத்துக்கிடம் வெவ்வேறு கட்டணங்கள் அறவிடப்படுவதாக பொதுமக்கள் சார்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில தொலைத்தொடர்பு நிலையங்களில் வெளிஇடங்களுக்கான தொடர்புகளுக்கு நிமிடத்துக்கு 8 ரூபாவும் சிலவற்றில் பத்து ரூபா முதல் பதினைந்து ரூபாவரையும் அறவிடப்படுகின்றது. சிலர் நிமிடத்துக்கு இருபது ரூபா அறவிடுகின்றனர் என்றும் தெரியவருகின்றது.

இந்தக் கட்டண வேறுபாடுகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வினாத்தாள்கள் வந்து சேர்ந்தன

எதிர்வரும் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ (உயர்தர) பரீட்சைக்கான முதலாவது தொகுதி - 12 தினங்களுக்குரிய - வினாத்தாள்கள் நேற்று விமான மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

அடுத்த தொகுதி இன்னும் சில நாள்களில் எடுத்து வரப்படும் என்று கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பரீட்சைக்குத் தேவையான காகிதாதிகள் ஏற்கனவே எடுத்துவரப்பட்டுள்ளன. பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (இ-10-9)

## இடம்பெயர்ந்த அரசாங்க ஊழியர்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்க நடவடிக்கை

### டக்ளஸ் தேவானந்தா உறுதி

யாழ்ப்பாணம்,ஜூலை28

இடம்பெயர்ந்துள்ள அரச ஊழியர்களுக்கு இரண்டு மாதங்களுக்காவது உலர் உணவு நிவாரணம் வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

ஈ.பி.டிபியின் யாழ்.பிராந்திய தலைமைச் செயலகத்தில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் ஆயிரத்தி 500 ரூபா வருமானமுள்ள 'உ' அட்டை வைத்திருப்பவர்களுக்கு உலர் உணவு வழங்க முடியாதுள்ளது என்று கூறினார்.

இதற்கு பதிலளித்த டக்ளஸ்

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# BEACON

(வெலிங்டன் சந்தி - அருகில்)

2001

G.A.Q. 1st IN Com.

ஆரம்பம்:- 29-07-2000

சனி 9 மணி (ப.நே)

எமது வழமையான ஆசிரியர் குழு (76760)


## அறிவித்தல்

**யாழ். மாநகரசபை ஊழியர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்**

நாளை (29-07-2000) சனிக்கிழமை நடைபெற இருந்த 34ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்பதைச் சங்க அங்கத்தவர்களுக்கு தயவுடன் அறியத் தருகின்றோம்.

*தலைவர்* — இ. க. இராசேஸ்வரன்
*செயலாளர்* — மு. சிவசண்முகராசா

(76755)

## கண்ணீர் அஞ்சலி

மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்

**கு. உத்ஜயனி**

கதிர் இயக்கப்பகுதி உத்தியோகத்தர்

**கு. ஜதீர்த்தனன்**

ஆகியோருடைய தந்தையாரான

அமரர்

**அம்பலவாணர் குலசேகரம்**

அவர்கள்

சிவபதமடைந்த செய்தி எமக்கு ஆழ்ந்த கவலையையும் அதிர்ச்சியையும் தருகின்றது. அன்னாருடைய குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மருத்துவ ஆய்வுகூட உத்தியோகத்தர்கள்.

*போதனா வைத்தியசாலை,*
யாழ்ப்பாணம். (76774)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்தைச் சேர்ந்தவரும் எமது சக உத்தியோகத்தருமான

அமரர் **றோமான் அன்ரனி**

(கிராம உத்தியோகத்தர், குருநகர் J/68, 69)

அவர்கள் நேற்று (27-07-2000) வியாழக்கிழமை காலமானதை அறிந்து அதிர்ச்சியும் ஆற்றொணாக் கவலையும் அடைகின்றோம். அவரின் பிரிவினால் துயருற்று அல்லலுறும் அவரின் குடும்பத்தினருடன் நாமும் பங்குகொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும்,*
*அனைத்து உத்தியோகத்தர்களும்.*

*நலன்புரிச் சங்கம்,*
*யாழ். பிரதேச செயலகம்.* (76778)

## கண்ணீர் அஞ்சலி

வேலணைப் பிரதேச சபையின் புங்குடுதீவு உப அலுவலகப் பணிமனையில் கடமையாற்றும் திரு.ந. மோகனரூபன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி நவரெத்தினம் சிவக்கொழுந்து**

அவர்களின் மறைவையொட்டி அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்துக்கொண்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைக் காணிக்கையாக்குகின்றோம்.

*தலைவர், உறுப்பினர்கள், செயலாளர்,*
*உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.*

*வேலணை பிரதேச சபை,*
*வேலணை.* (C/12333)


வினா-விடை வகுப்பும், துரித மீட்டலும்

A/L - 2001 - LOGIC

எஸ்.எஸ். மனோகரன்

ஆரம்பம்: 31.07.2000

மாலை 5 மணி

FURTHER EDUCATION

(உடுவில் மகளிர் கல்லூரி) (76780)

தென்மராட்சி

THE EXCELLENT INSTITUTE

இனுவில்

பொருளியற் கல்லூரியில்

இன்று முதல் நடைபெறுகின்றது (C/12332)

வேரமா

ரெலிக்கொம்

நவாலி வடக்கில்

மீண்டும் ஆரம்பம்

உள்ளூர்:- 070-212676

வெளி.:- 0094-70-212676 (C/12327)

SHAMROCK

(தற்காலிக இடமாற்றம)

29/3,

சோமசுந்தரம அவன்யூ.

சனி, ஞாயிறு வகுப்புகள்

A/L 2001 & 02

ACC. - Mr. S. RAJANI 12.00-1.00, 1.00-2.00

COM. - Mr. பசில் 1.00-2.00, 12.00-1.00

EC. - Mr. இராஜேஸ்

* A/L கலைப்பிரிவு
* Gr-5 முதல் O/Lவரை

(76773)

விக்னா

கல்வி நிறுவனம்

அளவையியல்

திரு. சயந்தன்

A/L 2002

எடுப்புக்கள் 8-9

ஆரம்பம்

29.07.2K

(76764)

ராஜா

(யாழ்ப்பாணம்)

விஜய், ஷாலினி, ரகுவரன், ஸ்ரீவித்தியா

மற்றும் பலர் நடிப்பில்

கண்ணுக்குள் நிலவு

காட்சிகள்

10.30 - 2.00 (புதிய நேரம்)

2/8 முதல்

எம்.ஜி.ஆர். நடித்த

குடியிருந்த கோயில்

நாகம்ஸ்

சுன்னாகம்.

ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன்

நடிப்பில

படையப்பா

(ரீல்ஸ்)

காட்சிகள்:

11.00, 2.30

(புதிய நேரம்)

(C/12232)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி குலம் றோஸ்மலர்

சமரபாகு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி குலம் றோஸ்மலர் நேற்றுமுன்தினம் (26-07-2000) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குலத்தின் அன்பு மனைவியும் பிரபாகரன் (உடுப்பிட்டி பாடசாலை உயர்தர மாணவன்), பிரஜனா (உடுப்பிட்டி சாதாரணதர மாணவி), யகிதரன் (உடுப்பிட்டி, தரம் 8 மாணவன்), பிரிந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று (27-07-2000) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் எள்ளங்குளம் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குலம்
(கணவர்)

*இலந்தைக்காடு,*
*சமரபாகு,*
*வல்வெட்டித்துறை.* (76769)

## றோமான் அன்ரனி (இதயன்)

(கிராம உத்தியோகத்தர், தரம்-1, குருநகர்)

றோமான் அன்ரனி (இதயன்) நேற்று (27-07-2000) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆசிர்வாதம் றோமான் - செல்வராணி ஆகியோரின் அன்பு மகனும் கொன்சியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் யேம்ஸ் மற்றும் சரசு ஆகியோரின் அன்பு மருமகனும் விதுசன் (சென்.ஜோன்ஸ் மாணவன்), நிருஷன் (சென்.ஜோன்ஸ் மாணவன்), யானுகா, ஜீனுகா (திருக்குடும்ப கன்னியர்மடம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வேவி (லண்டன்), பிசுப்பு, அன்ரன், பச்சைக்கிளி, ஆனந்தன், ஒலிவர் (யாழ்.மாநகரசபை), ஆனந்தராணி, இரட்ணராஜா (நோர்வே), குட்டியன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சின்னமணி, கமலா, இராஜேஸ்வரி, இம்மக்குளேட், கமலினி, றெனி, றஜி (நோர்வே), றெக்கட்சன் (லண்டன்), றெட்கொமறன் (லண்டன்), இராயப்பு (சுவிஸ்), பீலிக்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (29-07-2000) சனிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்துக்காக பரி.கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, மக்கள், சகோதரர்கள்
(றோ.ஒலிவர்)

*417/10,பீச் றோட்,*
*குருநகர்,*
*யாழ்ப்பாணம்.* (76781)

## திருமதி சின்னத்தம்பி இராசம்மா

உடுவில் டச்சு வீதியை பிறப்பிடமாகவும் யாழ்.இராமநாதன் வீதி, கலட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தம்பி இராசம்மா நேற்று (27-07-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதி சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தர் - இளையாச்சி தம்பதியினரின் அன்பு மகளும் மகாலிங்கம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற இராசலிங்கம் மற்றும் தர்மலிங்கம் (டோகா), சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம், சந்திரலிங்கம் (ஜேர்மனி), யோகலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும் தவமணி, யோகபாலன், சிவமணி, தவராணி, கிருஸ்ணகுமாரி, ஜெயராணி, மனோராணி, இராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், தங்கம்மா, செல்லத்துரை, ஐயாத்துரை, பவளம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28-07-2000) வெள்ளிக்கிழமை 2.00 மணியளவில் கொக்குவில் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

*33/4,இராமநாதன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (76786)

## திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை

பலகாடு, காரைநகரைச் சேர்ந்த திருமதி கணபதிப்பிள்ளை வள்ளியம்மை நேற்று (27-07-2000) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் சறோஜினிதேவி (வவுனியா), அன்னலட்சுமி, தனலட்சுமி, திருமகள், பரமேஸ்வரன் (சவுதி), கேதீஸ்வரி (கிருஷா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன் (வவுனியா), இராசேந்திரம் (வவுனியா), காலஞ்சென்ற மகேஸ்வரன் மற்றும் குணரத்தினம்(காரைநகர் ப.நோ.கூ. சங்கம்), குவேந்திரராஜா, குலேந்திரராஜா (பல்பொருள் வாணிபம்'T'K) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-07-2000) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
பிள்ளைகள்

*19/1 சிவப்பிரகாசம் வீதி,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.* (76789)

## இளையதம்பி சின்னையா

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி சின்னையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) 20-07-2000 வியாழக்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் சித்திரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்களின் அன்புக் கணவரும், கமலசித்திராவதி (ஜேர்மனி), விமலசித்திராவதி (ஜேர்மனி), காலஞ்சென்ற கலாநாதன் (காப்பாளர்.C.T.B.கோண்டாவில்), கமலநாதன் (பிரான்ஸ்), விமலநாதன் (B.Sc., கனடா), சாந்தசித்திராவதி (லண்டன்), ஆத்மநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், தேவராஜா (ஜேர்மனி), சொக்கலிங்கம் (ஜேர்மனி), மீனா (பிரான்ஸ்), மீரா (கனடா), ஜேகதாஸ் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் திருமதி சற்குணம் நல்லதம்பி, Dr. கதிர்காமு - இராஜேந்திரம், திருமதி அன்னலட்சுமி பொன்னுச்சாமி (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் 25-07-2000 செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
க.இராஜேந்திரம்.(Dr.)

*ஏழாலை வடக்கு,*
*ஏழாலை.* (C/12336)

யாழ்ப்பாணம்

### சமாதானப் பேச்சினால் பயனில்லை;

# ஆயுதப்போருக்குத் திரும்புமாறு யசீர் அரபாத்துக்கு வேண்டுகோள்

காஸா, ஜூலை 28

பலஸ்தீனப் பிரச்சினையில் சமாதானப் பேச்சுக்கள் பயனளிக்காததால் யசிர் அரபாத் மீண்டும் ஆயுதப் போராட்ட வழிக்குத் திரும்ப வேண்டும் என்று ஹமாஸ் என்ற இஸ்லாமிய அமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

காம்ப்டேவிட் மாநாடு தோல்வியில் முடிவடைந்ததை அடுத்தே இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

பேச்சுவார்த்தைத் தோல்விக்கு இஸ்ரேலும், பலஸ்தீனமும் ஒருவரை ஒருவர் குற்றஞ் சாட்டி வருகின்றன.



எதிர்வரும் செப்ரெம்பர் 13 ஆம் திகதி சுதந்திரப் பலஸ்தீன நாட்டை பிரகடனப் படுத்தப் போவதாக யசிர் அரபாத்தும், அதைத் தடுக்க அவசியமான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எகுட் பராக்கும் கூறி வருகின்றனர்.

காஸாவில் நூற்றுக்கணக்கான பலஸ்தீன அகதிகள் இஸ்ரேலுக்கு எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

தொடரும் இத்தகைய சம்பவங்களால் மீண்டும் மேற்காசியப் பிராந்தியத்தில் அமைதி குலையும் என்றும்—

புதிய பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும் என்று சிரியாவும், இனி அரேபியர்கள் வேறு வழிகளைப்பார்க்க வேண்டும் என்று லிபியாவும் கூறியுள்ளன.

சமாதானத் தீர்வு கிட்டாததால் இஸ்ரேல் பிரதமர் எகுட் பராக்கின் அரசியல் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளதாகக் கருதப்படுகிறது.

## பிரான்ஸ் 'கொன்கோட்' விபத்து:

# விமானியின் சாதுரியத்தால் பேரழிவு தடுக்கப்பட்டது!

பாரிஸ், ஜூலை, 28

பிரான்ஸில் விபத்துக்குள்ளான 'கொன் கோட்' ஜெட் விமானத்தின் சிறந்த தலைமை விமானியை சாதுரியத்தால் பேரழிவைத் தடுத்த தியாகி என்று பாரிஸ் மக்கள் போற்றுகின்றனர்

விபத்தின்போது விமானம் டிகாலே விமான நிலையம்அருகே குடியிருப்புகள் நெருக்கமாகஉள்ள பகுதியை நோக்கி விழ இருந்ததாகவும் ஆனால் விமானியின் கடும் முயற்சியால் புறநகர்ப் பகுதியில் குடியிருப்புகள் குறைந்த இடத்தில் உள்ள விடுதி மேல் விழுந்ததாகவும் கூறப்படுகிறது.

மக்கள் அதிகம் வசிக்கும் இடத்தில் விமானம் விழுந்திருந்தால் உயிரிழப்புகள் அதிகரித்திருக்கும். உயிருக்கு ஆபத்தான நிலையிலும் தங்களைக் காப்பாற்றிய தலைமை விமானியை அந்தப் பகுதி மக்கள் புகழ்ந்துள்ளனர்.

(ஐ-ஒ)

# உதைபந்தாட்ட வீரர்களை அதிகம் தாக்கும் புற்றுநோய்!

ரோம், ஜூலை 28

உதைபந்தாட்ட வீரர்கள் ஈரலில் கட்டி மற்றும் இரத்தப் புற்றுநோய் ஆகியவற்றால் அதிகம் பாதிக்கப்படும் சாத்தியம் உள்ளதாக இத்தாலிய மருத்துவ நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் உதைபந்தாட்ட வீரர் ஒருவர் நஷ்டஈடு கோரித் தாக்கல்செய்த வழக்கு ஒன்றில் இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இத்தாலியில் அதிசிறந்த 3 உதைபந்தாட்ட அணிகளில் கடந்த 30 வருடங்களாக விளையாடிய வீரர்கள் குறித்து நிபுணர்கள் குழு ஆய்வு நடத்தியது.

உதைபந்தாட்ட வீரர்களில் 165 பேர் ஈரலில் கட்டி, இரத்தப் புற்றுநோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டு இறந்துள்ளதாக அந்த ஆய்வில் தெரிய வந்துள்ளது.

உதைபந்தாட்ட வீரர்கள் ஹோர்மோன் ஊக்கி மருந்துகளை அதிகம் பயன்படுத்துவதாலேயே இத்தகைய நோய்கள் அவர்களை அதிகம் தாக்குவதாக மருத்துவ நிபுணர்கள் தெரிவித்தனர். (ஐ-ஒ-9)

## பிஜியில் விமானிகளைக் கடத்திய

# கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் நடவடிக்கை!

சுவா, ஜூலை 28

பிஜியில் கிளர்ச்சியாளரை அடக்க இராணுவம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தலைநகர் சுவாவுக்கு 18 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கொலுபாவில் பாடசாலை ஒன்றில் முகாமிட்டிருந்த சுமார் 350 கிளர்ச்சியாளர்களை இராணுவம் கைது செய்தது. அப்போது நடந்த மோதலில் கிளர்ச்சியாளர் ஒருவர் கொல்லப்பட்டார்.

இதற்கிடையில் —

பிஜி விமான நிலையத்திலிருந்து இரண்டு விமானிகளை கிளர்ச்சியாளர்கள் கடத்திச் சென்று தமது கட்டுப்பாட்டில் உள்ள கிராமம் ஒன்றில் சிறை வைத்துள்ளதாகவும் —

கடத்தப்பட்ட விமானிகளை மீட்க இராணுவம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் —

கூறப்படுகிறது.

நேற்று முன்தினம் இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட கிளர்ச்சித் தலைவர் மீது. புதிய அமைச்சரவை பதவியேற்பதை மிரட்டித் தடுத்ததற்காக தேசத்துரோகக் குற்றம் சாட்டப்படவுள்ளதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவித்தன.

நாடெங்கும் கிளர்ச்சியாளர்களால் நடத்தப்படும் வன்முறைக் கலவரங்களைத் தடுத்து நிறுத்த இராணுவம் முழு முயற்சி எடுத்துள்ளதாக இராணுவத் தளபதி கூறியுள்ளார். (ஒ)

# மேற்கு வங்காளத்தில் நடந்த அரசியல் மோதலில் 11 பேர் பலி!

கல்கத்தா, ஜூலை 28

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் நடந்த அரசியல் மோதலில் 11 பேர் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர்.

பீர்போல் மாவட்டத்தில் விவசாய நிலம் ஒன்றின் உரிமை தொடர்பான பிரச்சினையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினரும் திரிணாமுல் காங்கிரஸ் ஆதரவாளர்களும் மோதிக்கொண்டனர்.

நிலப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட ஒருவருக்கு கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவளித்ததாகவும் திரிணாமுல் காங்கிரஸ் எதிர்த்தரப்பு சார்பாகக் களமிறங்கியதாகவும் இதனை அடுத்து ஆயுதங்கள் தாங்கிய கட்சித் தொண்டர்கள் மோதலில் ஈடுபட்டதாகவும் கூறப்படுகிறது. (ஒ)

# சிறுவர் உரிமையை மீறுவோரை அவமானப்படுத்தப்பட வேண்டும்!

## 'யுனிசெவ்' தலைவர் உரை

ஜெனிவா, ஜூலை 28

''யுத்தத்தின் போது அல்லது யுத்தத்திற்காகச் சிறுவர்களின் உரிமைகளை மீறுவோர் அவமானப்படுத்தப்பட வேண்டும்.''

சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல் குறித்த ஐ. நா. பாதுகாப்புச்சபை விவாதத்தில் உரையாற்றிய 'யுனிசெவ்' தலைவர் பெரல்தலமி இவ்வாறு கூறினார்.

1986 — 96 ஆம் ஆண்டுக் காலப்பகுதிகளில் உலகில் யுத்தங்களினால் சிறுவர்களில் 20 லட்சம் பேர் கொல்லப்பட்டும், 60 லட்சம் பேர் காயப்படுத்தப்பட்டும் உள்ளனர். 10 லட்சம் குழந்தைகள் அநாதையாகிவிட்டனர் என்று கூறிய தலமி யுத்தப் பிரதேசங்களில் சிறுவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் — அவர்களின் உரிமைகளை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் — வலியுறுத்தினார்.

(ஐ ஒ-9)

# ஷேக்ஹசீனா மலேசியா விஜயம்

டாக்கா, ஜூலை 28

பங்களாதேஷ் பிரதமர் ஷேக்ஹசினா 3 நாள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை மலேசியா செல்லவுள்ளார்.

மலேசியப் பிரதமர் மகதிர் முஹமத்துடன் இருநாட்டு உறவுகள், பொருளாதார முதலீடுகள் உட்பட பல விடயங்கள் குறித்து பிரதமர் ஹசினா பேச்சு நடத்துவார் என்று பங்களாதேஷ் அதிகாரிகள் கூறியுள்ளனர்

(ஐ—ஒ—9)

# சிக்கல்களைத் தீர்க்கக் குழு

பாங்கொக், ஜூலை 28

தாய்லாந்தில் நடைபெற்ற தெற்காசிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டில் பிராந்தியத்தில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்கக் குழு ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தெற்காசிய நாடுகளின் பாதுகாப்புத் தொடர்பாகப் புதிய திட்டம் ஒன்றும் மாநாட்டில் உருவாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-ஒ)

உலக அரங்கில்

# அரசு ஊழியர்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தத் தடை

புதுடில்லி, ஜூலை 28

14 வயதுக்குட்பட்ட சிறுவர்களை அதிகாரிகள் மற்றும் அரச ஊழியர்கள் வீட்டு வேலைக்கு வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது

தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரையின் பேரிலும் —

குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புக்காக பல நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வந்தபோதிலும் அரச அதிகாரிகள் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்வதாலும் —

மத்திய அரசு இந்த உத்தரவை விடுத்துள்ளது.

தமிழ் நாடு உட்பட 13 மாநிலங்களில் ஏற்கனவே இந்த விதி பின்பற்றப்படுவது குறிப்பிடத்தக்கது [ஒ]

## யுத்தநிறுத்தம் செய்துள்ள

# 'ஹிஸ்புல் முஜாகிதீன்' அமைப்புக்கு கொரியத் மாநாட்டுக்கட்சி எதிர்ப்பு

ஜம்மு, ஜூலை 28

காஷ்மீரில் ஒருதரப்பாக யுத்த நிறுத்தம் அறிவித்துள்ள 'ஹிஸ்புல் முஜாகிதீன்' இயக்கத்திற்கு இஸ்லாமியக் 'கொரியத்' தலைவர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர். தீவிரவாத இயக்கங்களின் அமைப்பான ஜிகாத் சபையிலிருந்தும் அந்த இயக்கம் வெளியேற்றப்பட்டுள்ளது.

காஷ்மீர் மக்களும், அரசியல் கட்சிகளும் யுத்த நிறுத்தத்திற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ள போதும் ஹிஸ்புல் முஜாகிதீன் தீவிரவாதிகள் அவசரப்பட்டு முடிவு எடுத்துள்ளதாக கொரியத் தலைவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

பாகிஸ்தானில் இருந்து செயற்படும் 14 தீவிரவாதக் குழுக்களை உள்ளடக்கிய ஐக்கிய ஜிகாத் சபை, அதன் தலைவராக இருந்த ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத் தளபதியையும் பதவி நீக்கியதுடன். அந்த இயக்கத்தை வெளியேற்றியது.

யுத்த நிறுத்த அறிவிப்பை வரவேற்றுள்ள காஷ்மீர் முதலமைச்சர் பரூக் அப்துல்லா, அரசு உடனடியாக ஹிஸ்புல் முஜாகிதீன்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று கோரியுள்ளார்.

(ஐ ஒ)

# கிறிஸ்தவர் மீதான தாக்குதல்கள்; இந்திய நாடாளுமன்றத்தில் அமளி

புதுடில்லி, ஜூலை 28

இந்தியாவில் கிறிஸ்தவ அமைப்புகள்மீது நடைபெற்று வரும் வன்முறைத் தாக்குதல்களின் எதிரொலியாக நாடாளுமன்றத்தில் கடும் அமளி ஏற்பட்டது. இதனால் அவை ஒத்திவைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்தின் போது பேசிய உறுப்பினர் பிரபுல்பட்டேல் பல்வேறு மாநிலங்களில் கிறிஸ்தவர்கள் கொல்லப்படுவது மற்றும் அவர்களின் வழிபாட்டுத்தலங்களில் குண்டு வெடிப்பு ஆகியவற்றுக்கு மத்திய அரசைக் குறை கூறினார்.

இதற்குப் பதிலளித்த உள்துறை அமைச்சர் எல் கே. அத்வானி குண்டு வெடிப்புகளுக்கு காரணமான தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டதாகவும் —

சட்டம் - ஒழுங்குப் பிரச்சினைகளுக்கு மாநில அரசுகள் தான் பொறுப்பேற்க வேண்டும் மத்திய அரசல்ல என்றும் கூறியதை அடுத்து சபையில் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது. இதனை அடுத்து அவை ஒத்திவைக்கப்பட்டது.

## மீட்பு

காஷ்மீரில் நிலச்சரிவுகளில சிக்கிய அமர்நாத் குகைக் கோயிலுக்குச் சென்ற 52,000 யாத்திரிகர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

பகல்காமிலிருந்து அமர்நாத் செல்லும் பாதையில் பல இடங்களில் ஏற்பட்ட நிலச்சரிவுகளில் இவர்கள் சிக்கியிருந்தனர்.

# யாழ். நகர் தனியார் கட்டடத்தில் சாவகச்சேரிபிரதேசசபைக்கூட்டம்

சாவகச்சேரி பிரதேசசபை கூட்டம் தலைவர் அன்ரன் பொன்னையா தலைமையில் நேற்று யாழ். நகரிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் புளொட், ஈ.பி.டி.பி, ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சிகளைச் சேர்ந்த பதினொரு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கொடிகாமம் சந்தைக் கட்டடதொடதியைகட்டுவதற்கு 30 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்வதெனவும் மந்துவில், வரணிப் பகுதிகளில் பொதுக்கிணறுகள் அமைப்பது என்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

# ரணில் ஆளும் கட்சியில் இணைந்துவிடுவாராம்!

## ஜே. வி. பி. கூறுகிறது

ரணில் விக்கிரமசிங்க ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து கொள்ளும் சந்தர்ப்பங்கள் அதிகரித்து வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே. வி. பி) செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் மாத்தறை மாவட்ட மாநாடு அண்மையில் அக்குரசையில் நடைபெற்றது. அதில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவராகப் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் இணைந்து வருகின்றனர். இந்த நிலையில் அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் விரைவில் அக்கட்சியுடன் இணைந்து கொள்வார் என்றே கருத வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் உலக வங்கியின் ஆலோசனைகளுக்கு இணங்க இந்நாட்டை விற்கும் கொள்கைகளுக்கு ஐக்கியதேசியக் கட்சி உடன்பட்டே செயற்பட்டு வந்துள்ளது இதனையே இன்று ஆளும் பொது மக்கள் ஐக்கிய முன்னணியும் செய்து வருகின்றது.

இந்தநிலையில் ஐக்கியதேசியக் கட்சியை இணைத்துக் கொண்டு தாம் முகம் கொடுத்துள்ள இக்கட்டான நிலைமைகளில் இருந்து விடுபடும் முயற்சிகளிலேயே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டு வருகின்றார்.

மேலும் இந்நாட்டில் உள்ள சகல இனங்களையும் ஒன்றுபடுத்தும் முயற்சியில் ஜனாதிபதி ஈடுபட்டு வருவது பிரச்சினைகளில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு அல்ல. மாறாக இந்த நாட்டைப் பிளவுபடுத்தும் நோக்கிலேயே அதனைச் செய்துவருகின்றார்.

முதலில் நாட்டைக் காப்போம் பின்னர் கட்சியைப் பற்றிச் சிந்திப்போம் என ஜனாதிபதி கூறிவருகின்றார். அவர் நாடு என்று கூறுவது இலங்கை முழுவதையும் அல்ல. யாழ்ப்பாணம் மாத்திரமே அவரது நாடாக உள்ளது.

இந்த நாட்டில் உள்ள தோட்டங்கள், விவசாய நிலங்கள் மற்றும் நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்த்துவிட்டு நாட்டைப் பாதுகாப்போம் என ஆளும் கட்சி கூறிவருவது கேலிக்குரிய விடயமாகவே உள்ளது.

யாழ்ப்பாணத்தை என்ன விலை கொடுத்தாவது தக்கவைத்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில் செயற்படும் ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மக்களைப் பாதிக்கும் விடயங்களை மறந்துவிட்டது.

(இ-3)

# எழுதுநர் பதவிக்கு 70 பேருக்கு கொழும்பில் நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஜூலை 28

மத்திய அரச சேவையில் எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த பதவிகளுக்கு நியமனம் வழங்குவதற்காக கடந்த வருடம் நவம்பர் மாதம் 6ஆம் திகதி நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்களில் இருந்து ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி யாழ்.மாவட்டத்தில் இருந்து 70 பேருக்கு நியமனம் வழங்கப்பட உள்ளது இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற உள்ளன

இந்த நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 6ஆம் திகதி கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் இருந்து நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரில் 67 பேரின் விவரம் வருமாறு:

எஸ். ஸ்ரீகரன் (சித்தன் கேணி). எஸ் செந்தூரன் (அல்வாய் மேற்கு). வி. என். சிவச்செல்வன் (புதிய செம்மணி வீதி, நல்லூர்), ரி. ஜெயநந்தினி (ஆனைக்கோட்டை), ஆர். ஆனந்தசொரூபன் (கரவெட்டிதெற்கு ரி. திருமகள் (கொழும்புத்துறை), கே. செல்வன் (கொற்றாவத்த கரவெட்டி), எஸ். சர்மிளா (மல்லாகம்), எஸ். ஜெயசங்கர் (வரணி), கே. வி பானு (கரவெட்டி தெற்கு).

ஏஸ். ஞானபாலன் (தும்பளை). என். கோணேஸ்வரன் (கொக்குவில் கிழக்கு), ஏ பிரபாகரமூர்த்தி (வாதரவத்தை), எஸ். ஹேமானந்தினி (மட்டுவில் வடக்கு), எஸ். கவிதா (வதிரி, கரவெட்டி). எஸ் மாலதி (நுணாவில் மத்தி), எஸ். சுகிர்தா (பிரம்படி லேன். கொக்குவில்), என். சஞ்சயன் (தெல்லிப்பழை கிழக்கு), எஸ் சாந்தி (இடைக்காடு, அச்சுவேலி), எஸ். பத்மலோசினி(கொக்குவில்கிழக்கு)

ஏ பவிதரன் (பன்னாலை. தெல்லிப்பழை), ரி.சிவரூபன் (திருநெல்வேலி), எஸ். மலர்விழி (நல்லூர்), எம். பிரபிந்தன் (நாவலர் றோட், யாழ்.) எஸ். செல்வமாலினி(கொழும்புத்துறை). ஆர். ராஜேஸ்கண்ணன் (கரவெட்டிவடக்கு) என். மோகனா (சித்தன் கேணி), எஸ். விஜித்ரா (கன்னாகிட்டி, யாழ்) கே ருக்ஷி (தாவடி வடக்கு), எஸ். தயாபரன் (மல்லாகம்).

எம். தீபா(பருத்தித்துறை), கே. பிரதீபன் (கரவெட்டி கிழக்கு), வி. நந்தகோபன் (புலோலி), கே. ஐ. பிரட்லே (சுண்டுக்குழி), எம். சுகன்யா (கே. கே. எஸ். வீதி, யாழ்.), ரி. மோகனராஜ் (புத்தூர் மேற்கு), கே. மதிவதனி (கந்தரோடை), என் உபேந்திரன் (கரணவாய் தெற்கு), பி ஜெயந்தி (பண்டத்தரிப்பு), என். சந்திரகாசன் (நெல்லியடி)—

என். வித்தியா (உரும்பிராய் வடக்கு), ரி. கமலவேணி (ஏழாலை மேற்கு), கே. சவிதமதி (மூளாய்), ரி. சிவகுமார் (வதிரி), வி. சிவராஜா (குடமியன், வறணி), என். கணேசன் (கந்தர்மடம்), ரி. குகதர்மினி (விழிசிட்டி, தெல்லிப்பழை), ஜி கவிதா (அல்வாய் கிழக்கு), ரி. சுதா (மீசாலை மேற்கு), வி ஜெயகாந்தன் (புலோலி மேற்கு)—

கே. தயாரஞ்சிதம் (தெல்லிப்பழை). என் பிரேமிளா (கோண்டாவில் கிழக்கு), பி. தர்சினி (மட்டுவில் தெற்கு). பி. மைதிலி (புலோலி தெற்கு), பி. சத்தியன் (கல்வியங்காடு), ஆர். எழில்வேந்தன் (கரணவாய் தெற்கு), ரி. உமா (புலோலி தெற்கு), கே. மீனயோகினி (மானிப்பாய் வீதி, உடுவில்), ஆர். ராதிகா (மானிப்பாய்), எம். ரமணன் (தும்பளை)—

ஏ. ஜெ. ஜெமினா (மானிப்பாய்), கே. என். பரமேஸ்வரன் (இணுவில்), ஜி. சிவதர்சினி (புலோலி தெற்கு), ஆர். தர்சினி (கோப்பாய் தெற்கு), ஏ. சுபாஸ்கரி (திருநெல்வேலி கிழக்கு) பி. குகப்பிரியா (நல்லூர்), ஜி. கிருசாந்தன் (இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி). (இ-3-10)

## வீடியோ காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து நடத்திவரும் வீடியோ படக்காட்சித் தொடரில் சேரி வாழ்வைச் சித்தரிக்கும் மீரா நாயரின் ''சலாம் பம்பாய்'' (ஹிந்தி) திரைப்படம் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக புவியியல்துறையின் இரண்டாம் இலக்க அறையில் காண்பிக்கப்படும்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு புறநிலைப்படிப்புக்கள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவச்சந்திரன் கேட்டுள்ளார்.

(இ-க)

## கலாசாலையில் மேலும் 150 பேருக்கு அனுமதி

யாழ்ப்பாணம், ஜூலை 28

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் மேலும் 150 ஆசிரிய மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சுடன் நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இவர்களுக்கான அனுமதி வழங்கப்பட்டதாக ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-5-9)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

அரச திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் கடமையாற்றி கலவர காரணங்களினால் பதவி இழந்தவர்கள், பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள், இடைநிறுத்தம் செய்யப்பட்டவர்கள் போன்றவர்களை ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் யாழ். கிளையுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

எதிர்வரும்ஓகஸ்ட் 16ஆம்திகதிக்கு முன் இதுதொடர்பான விவரங்களை தமக்கு சமர்ப்பிக்குமாறு கட்சியின் யாழ். கிளை பிரதி அமைப்பாளர் ரி தேவகுலநாயகம் கேட்டுள்ளார்.

(இ-5)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த உற்சவம் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ் மாநகரசபையின் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(இ-10)

## வலிகாமத்தில் நேர்முகப் பரீட்சை

வலி.தென்மேற்கு. ஜூலை 28

தமிழ்மொழி மூலத் தகுதிகாண் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை வலிகாமம் கல்வி வலயத்தில் எதிர்வரும் 4ஆம் திகதிமுதல் நடத்தப்படவுள்ளது.

சம்பந்தப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக் கடிதங்கள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

பரீட்சார்த்திகள் மூலப்பிரதிகளுடனும் இரு நிழற்பிரதிகளுடனும் நேர்முகப் பரீட்சைக்குக் குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

(க-5-185)

# தென்மராட்சி மாணவர்களுக்கு விசேட பரீட்சை நிலையங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 28

தென்மராட்சி, பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த — ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றும் மாணவர்களுக்கென விசேட பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார் என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் பகுதிகளில் மேற்படி பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன என்றும் —

இந்தப் பகுதிகளில் இடம்பெயர்ந்து வசிக்கும் தென்மராட்சிமாணவர்கள்பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு வசதியாக தமது பெயர் மற்றும் விவரங்களை இன்றுவெள்ளிக்கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், வேம்படி மகளிர் கல்லூரியிலும் பதிவு செய்து கொள்ளுமாறு—

பதிவுகள்செய்பவரும் மாணவர்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை தவறாது சமர்ப்பிக்க வேண்டும் எனவும்—

யாழ். வலயக்கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(இ-7)

## கலைக்கதம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

நெடுந்திவு றோமன்கத்தோலிக்க மகளிர் கல்லூரியில் இன்று மாலை 6 மணிக்கு '' கலைக்கதம்பம் '' நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேற்படி கல்லூரி மாணவிகள் வழங்கும் நடனம், நாடகம், வில்லிசை மற்றும் சொற்பொழிவு என்பன விசேட நிகழ்வுகளாக இடம்பெறும்.

(இ-7)

## ஒத்திவைப்பு

உணவு நிவாரணம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பாக யாழ். செயலகத்தில் இன்று நடைபெறவிருந்த கலந்துரையாடல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக யாழ். செயலக மேலதிக அரச அதிபர் து. வைத்தியலிங்கம் அறிவித்துள்ளார். (இ-5-10)

## குருபூசையை ஒட்டிய போட்டிகள்

வடமராட்சி, ஜூலை 28

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் மயில்வாகனம் சுவாமிகளின் 15ஆம் ஆண்டு நினைவு தினத்தை ஒட்டிய குருபூசைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளன.

மாணவர்களிடையே பேச்சு, கட்டுரை, பண்ணிசைப் போட்டிகள் இப்போட்டியில் இடம்பெறும்.

வெற்றியீட்டுவோருக்கான பரிசுகள் அடுத்த [ஓகஸ்ட்] மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும் குருபூசை தினத்தன்று வழங்கப்படும்.

(இ-173)

# பல்கலை மாணவர்களுக்கு இந்து சமயப் பேரவை உதவி

வலிகாமம்தெற்கு, ஜூலை 28

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றுவரும் தாய்தந்தையர்களை இழந்த, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு யாழ்ப்பாணம் இந்து சமய பேரவையினரால் வழங்கப்பட்டுவரும் உதவு தொகை தற்போது வழங்கப்படுகின்றது.

இம்மாதத்துக்கான உதவு தொகையை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் அவற்றை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமைக்குள் பெற்றுக்கொள்ளுமாறு இந்து சமய பேரவை செயலாளர் கேட்டுள்ளார்.

அத்துடன் தாய் தந்தையரை இழந்து வறுமைகோட்டின் கீழ் வாழும் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மாணவர்கள் தம்முடன் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு தேவையான உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் கூறினார். (இ-152)

## கிராம சேவையாளர் நேர்முகப்பரீட்சை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

இன்றும் நாளையும் நடைபெறவிருந்த கிராம அலுவலர்களைத் தரம் ஒன்றுக்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப் பரீட்சைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதியும் மறுநாளும் நடைபெறவுள்ளதாக யாழ்.செயலக நிர்வாக அதிகாரி கே.ராஜதுரை அறிவித்துள்ளார். (இ-9-5)


## கண்ணீர் பூக்கள்

குருநகர் கிராம உத்தியோகத்தர்

### றோமான் அன்ரனி (இதயன்)

அவர்கள் நேற்றையதினம் காலமான செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

### மதனா ஜுவல்லறி

177/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(76791)

உதயன்

## கரைசேராப் பயணம்

யாழ்ப்பாண மாவட்ட மக்களின் அன்றாட வாழ்க்கையின் பெரும் அசௌகரியங்களில் - வசதிக்குறைவுகளில் - ஒன்றாக விளங்குவது வெளிமாவட்டங்களுக்கான போக்குவரத்து. இற்றைக்குப் பத்து வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் - வவுனியா தரைவழிப்பாதை தடைப்பட்டதிலிருந்து போக்குவரத்துக் கஷ்டம் தொடர்கதையாகவே நீளுகிறது.

இதில் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவெனில், குடாநாடு அரசாங்கத்தின் கட்டுப்பாடுக்குள் வந்து - மக்கள் மீளக் குடியமர்ந்து - நான்கு வருடங்கள் முழுமையாகக் கடந்த பின்னரும், சீரான போக்குவரத்துச் சேவை மக்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை.

தரைவழிப்பாதை தடைப்பட்டதால் கடற்போக்குவரத்தும் வான்வழிப் போக்குவரத்துமே மாற்று மார்க்கங்கள். யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் சில காலமாக விமானச்சேவைகள் நடைபெற்ற போதிலும் அவற்றுக்கும் குந்தகம் விளைவிக்கப்பட்டது. அதனால் மக்களின் அவசர தேவைகளுக்கான விரைவான பயண் வசதி அற்றுப்போனது.

விமான சேவை நடைபெற்ற வேளையிலும் கூட மக்கள் எல்லோரது போக்குவரத்துத் தேவையையும் அதனால் நிறைவேற்ற முடியவில்லை. நாளொன்றுக்குச் சுமார் நூறு பேர் மட்டுமே பயணம் செய்யமுடிந்தது. மேலும் விமானக் கட்டணம் பணவசதி படைத்தவர்களுக்குரிய ஒன்றாகவே அமைந்தது. சாதாரண மக்களுக்கு அது எட்டாக் கனியாக இருந்தது.

விமானப் பயணவசதி இருந்த காலத்திலிருந்தே சீரான கப்பற் சேவை தேவை என்பது அரச அதிகாரிகளுக்கு உணர்த்தப்பட்டிருந்தது. எனினும் ஒழுங்கான பயணிகள் கப்பற்சேவைக்கு ஏற்பாடு செய்வதில் ஏனோ தானோ என்ற போக்கையே அரசாங்கம் கடைப்பிடித்து வந்தது. கப்பற் சேவையை நடத்தும் பொறுப்பு காலத்துக்குக காலம் வெவ்வேறு அரச பிரிவுகளிடம் ஒப்படைக்கப்பட்டன. அவை, அந்தா இந்தா என்று வாக்குறுதிகளும், பத்திரிகைச் செய்திகளும் வழங்குவதோடு காலத்தைக் கழித்தன; பயணம் கரைசேரவில்லை. அரசு குத்தகைக்கு கப்பல் அமர்த்தும்; இல்லை சொந்தமாக வாங்கப் போகிறது; கேள்விப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. கப்பல்களைப் பார்வையிட அதிகாரிகள் வெளிநாடு சென்றுவிட்டனர் என்ற 'கதைகள்' மாறிமாறிச் சொல்லப்பட்டனவே அன்றி கப்பற் பயணம் சீராகவில்லை.

கப்பற சேவைக்கு செஞ்சிலுவைச் சங்கத்தின் வழித்துணை பெறுவது சம்பந்தமாக அரசின் அசமந்த நடவடிக்கைகள் அத்தியாயம் அத்தியாயமாக நீளக்கூடியவை. ஒவ்வொரு அரச பிரிவும் விட்டகுறை தொட்ட குறையாக நீட்டி, இப்போதுதான் அரை உருவம் பெற்றுள்ளது.

இது ஒன்றே குடாநாட்டு மக்களுக்கான கப்பற் போக்குவரத்து வசதிகளைச் செய்வதில் அரசாங்கத்தின் அக்கறையின்மையைப் புலப்படுத்தப் போதுமானதாகும். யாழ்ப்பாண மக்களின் கப்பற் போக்குவரத்து விவகாரம் ஜனாதிபதி வரை சென்ற போதிலும், ஆக்கபூர்வமான, உருப்படியான நடவடிக்கை இன்றி காலம் கடந்து போனதே மிச்சம்.

இரண்டு மாதங்களுக்கு முன்னரும் கூட குடாநாட்டு மக்கள் மாதத்துக்கு ஒருமுறை சரக்குக்கப்பலில் மந்தைகள் போல அடைக்கப்பட்டு பயணம் என்ற பெயரில் திருகோணமலைக்கு ஏற்றிச்செல்லப்பட்டதே அரசின் ஏற்பாடாக இருந்தது. அந்தப் பயணத்துக்கும் மக்கள் நாயாகப் பேயாக அலைய நேர்ந்தது. 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பற் சேவை ஆரம்பிக்கப்பட்ட கடந்த இரு மாதங்களில், பயணம் வேண்டாம் என்ற அளவுக்கு மக்கள் சலிக்கிறார்கள். அவசர அவசியத் தேவைகளுக்கு உரிய காலத்தில் வெளிமாவட்டம் செல்லமுடியாத மிகவும் பாதகமான நிலை உருவாகியுள்ளது. நாளாந்தம் அங்கும் இங்குமாக அலைவதே மக்களுக்கு ஓர் இடர் நிலைப் பயண அனுபவமாகிறது.

வாரத்தில் ஆகக்குறைந்தது இரண்டு அல்லது மூன்று தடவைகளோ அல்லது இரண்டு கப்பல்களோ சேவையில் ஈடுபடுத்தப்படாவிடில குடாநாட்டுமக்களின் முதன்மை அடிப்படை உரிமைகளில் ஒன்றான போக்குவரத்து அவர்களுக்கு மறுக்கப்படுவது நிரந்தர ஒழுங்காகிவிடும்!

# இடம்பெயரும் மக்களுக்கு சரியான வழிகாட்டுதல் வழங்குவது அவசியம்

**இன்று ஜூலை 28ஆம் திகதியை சர்வதேச அகதிகள் தினமாக ஐ.நா பிரகடனம் செய்துள்ளது. அதனை ஒட்டி இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

யாழ். குடாநாட்டில் 2000 ஆண்டுக்குரிய இடப்பெயர்வு மார்ச் 26 ஆம்திகதி இரவு மாமுனையில் இடம்பெற்ற திடீர் தாக்குதலோடு ஆரம்பமானது. மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் நாகர்கோயிலுக்கு அப்பாலுள்ள மக்களும், பளைப் பிரதேசசெயலர் பிரிவில் முகமாலை தொடக்கம் வேம்பொடுகேணிவரையிலுள்ள மக்களும் முதலில் இடம்பெயர்ந்தனர். அகதிகளுக்குத் திடீர்த் தடை போட்டமையினால் கிட்டத்தட்ட 250 குடும்பங்கள் குடாநாட்டுக்கு வரமுடியாமல் வன்னிக்குச் செல்ல நேர்ந்தது.

பளைப் பிரதேசத்திலிருந்து மக்கள் இடம்பெயர்வது பாதுகாப்புப் படையினரால் தடை செய்யப்பட்டது. அவர்களை மீட்கும் நோக்கில் யாழ்ப்பாணத்தில் மக்கள் போராட்டங்கள் நடைபெற்றன. பலவிதமான அழுத்தங்களும் கொடுக்கப்பட்டன. அதன் விளைவாக படிப்படியாக சில கிராமங்களிலிருந்து மக்கள் இடம்பெயர அனுமதிக்கப்பட்டனர். தெற்கு தொங்கலிலுள்ள மாசார், சோரன்பற்று, மல்வில், தர்மக்கேணி போன்ற கிராமங்களிலிருந்து 389 குடும்பங்களிலுள்ள மக்கள் அனுமதிக்கப்படவில்லை. அவர்களை சென்று பார்ப்பதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அவர்களை மீட்பதற்காக 12-04-2000 அன்று யாழ் குடாநாடு முழுவதும் ஹர்த்தாலும், கச்சேரியில் உண்ணாவிரதமும் அனுஷ்டிக்கப்பட்டது.

18-04-2000 அன்று மாசார் கிராமத்தை சுற்றி ஷெல்கள் விழத் தொடங்கியமையினால் மக்கள் பதற்றத்துடன் வெளியேறி சோரன்பற்றுக்குச் சென்றனர். இரு கிராம மக்களுமாக சேர்ந்து பலவித சோதனைகள், இன்னல்களுக்கு மத்தியில் நடந்து பளைக்கு 19-04-2000 அன்று சென்றனர். அவர்கள் தங்களுடைய பலவிதமான சொத்துக்கள், கால்நடைகள் முதலியவற்றை கைவிட்டே வந்தனர். அதனோடு தர்மக்கேணி, தம்பகாமம் முதலிய கிராம மக்களும் பளை நகரத்தில் எஞ்சியிருந்தவர்களும், வண்ணான்கேணி கிராம மக்களும் புலோப்பளை, கிளாலி ஊடாக விடத்தல்பளை சென்றடைந்தனர். பாடசாலையில் ஒரு தொகுதி மக்களும் தெரிந்தவர்கள் வீடுகளில் இன்னொரு தொகுதி மக்களும் எஞ்சியோர் மிருசுவிலுக்கும் சென்றார்கள். சில குடும்பங்கள் கெற்பலி, பாலாவி கிராமங்களுக்கும் சென்றன. 21ஆம் திகதியளவில் பளையில் வசித்த அனைவரும் இடம்பெயர்ந்துவிட்டனர்.

மிருசுவிலில் உள்ள முகாமில் இடநெருக்கடியும், சுகாதார வசதிக்குறைவும் இருந்தமையினால் அங்கிருந்து மக்கள் வரணி மகாவித்தியாலயத்துக்கும், மீசாலை பாடசாலைக்கும், மந்துவில் பாடசாலைக்கும் இடம்மாறினர். சித்திரை மாத முடிவிலிருந்து தென்மராட்சி மக்களை - குறிப்பாக கண்டிவீதிக்கு தெற்கேயுள்ளவர்களை - இடம்பெயருமாறு முன் அறிவித்தல்கள் கொடுக்கப்பட்டமையினால் மக்கள் வடமராட்சிக்கும், வலிகாமத்திற்கும், தென்மராட்சியின் ஏனைய பகுதிகளுக்கும் இடம்பெயரத் தொடங்கினர்.

★ 01-05-2000ல் இடம்பெயர்ந்தோர் நிலை வருமாறு:-

| பிரதேசம் | குடும்பங்கள் | அங்கத்தவர் |
|---|---|---|
| வடமராட்சி கிழ. | 1,150 | 4,194 |
| பளை | 1,854 | 6,957 |
| தென்மராட்சி | 4,123 | 14,462 |
| மொத்தம் | 7,127 | 25,613 |

## கண்ணீர் கதைகள்

09-05-2000 இரவு அரியாலைப் பகுதியில் இடம்பெற்ற சிறு தாக்குதலையடுத்து 20-05-2000வரை கடும் மோதல்கள் தென்மராட்சியில் நடந்தன. இதன் விளைவாக தனங்களப்பு நாவற்குழி வரையிலான மக்களும் கைதடி, நுணாவில், மட்டுவில், சரசாலை, சாவகச்சேரி நகரம் ஆகிய இடங்களிலிருந்தும் பெரும்பாலான மக்கள் இடம்பெயர்ந்தனர். வரமுடியாத பலர் அவ்விடங்களிலேயே இருந்தனர். பின்பு வன்னிக்குச் சென்றதாக அறிகின்றோம். கைதடியில் சிக்குண்ட பலர் தரவையூடாக நீர்வேலிக்கு வந்து சேர்ந்தனர். ஒவ்வொரு குடும்பமும் தாங்கள் பட்ட கஷ்டங்களை சோகக்கதையாக கண்ணீர் மல்க கூறின.

தென்மராட்சியில் இருந்து சரசாலை ஊடாக வடமராட்சிக்கு வந்தவர்கள் யாக்கரு சோதனைச் சாவடியில் தடுத்துவைக்கப்பட்டு சோதனையிடப்பட்டு பதிவு செய்த பின்பே அனுமதிக்கப்பட்டனர். இதனால் சில நாள்கள் மக்கள் மிக நீண்ட வரிசையில் கடும் வெயிலில் மணித்தியாலக் கணக்காக ஆகாரமின்றி காத்து நிற்கவேண்டிய பரிதாப நிலைக்கு உட்படுத்தப்பட்டனர். பின்பு பதற்றத்தின் காரணமாக மீசாலை, அல்லாரை, கச்சாய், கொடிகாமம் ஆகிய மக்களும் இடம்பெயர்ந்து வடமராட்சிக்கு வந்தபொழுது மேற்குறிப்பிட்ட பரிதாப நிலையை முள்ளி சோதனைச் சாவடியில் அனுபவித்தனர். கைதடியிலிருந்து தரவை ஊடாக நீர்வேலிக்கு வந்தவர்களை அத்தியார் இந்துக்கல்லூரியில் விசாரணை செய்து, பதிவு செய்த பின்பே வெளியேற அனுமதித்தனர்.

அரியாலை, கொழும்புத்துறை மக்கள் போர் முனையிலிருந்து தமது அனைத்துப் பொருள்களையும்விட்டு தப்பியோடினர். யாழ் மாநகர எல்லைக்குட்பட்டோரும், கல்வியங்காடு, நாயன்மார்க்கட்டு பகுதியில் உள்ளோரும் முன்னறிவித்தல் காரணமாக இடம்பெயர்ந்தனர். கோப்பாய், நீர்வேலி, அச்செழு மக்கள் ஷெல்லின் தொந்தரவுகளினால் இடம்பெயர்ந்தனர்.

01-05-2000இல் இடம்பெயந்தோர் நிலை வருமாறு:-

| பிரதேச செயலர் பிரிவு | மொத்த குடிசனம் | | இடம்பெயர்ந்தோர் | | வீதம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பங்கள் | அங்கத்தவர் | குடும்பங்கள் | அங்கத்தவர் | |
| யாழ்ப்பாணம் | 13,073 | 42,982 | 12,360 | 40,560 | 95% |
| நல்லூர் | 18,392 | 58,964 | 12,110 | 38,995 | 66% |
| கோப்பாய் | 17,369 | 58,337 | 4,303 | 15,660 | 25% |
| சாவகச்சேரி | 19,613 | 71,871 | 15,070 | 53,713 | 77% |
| மருதங்கேணி | 1,963 | 7,011 | 1,282 | 4,497 | 65% |
| பளை | 1,900 | 7,070 | 1,900 | 7,070 | 100% |
| மொத்தம் | 72,310 | 2,46,235 | 47,025 | 1,60,495 | 66% |

## மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

இடம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம். (1) தங்குமிட வசதி, (2) உணவு, (3) உணவு தவிர்ந்த அத்தியவசியப்பொருள்கள், (4) சுகாதார வசதிகள், போஷாக்கு, (5) கல்வி, (6) குடும்ப அங்கத்தவர்களுக்குரிய பாதிப்பு.

### தங்குமிட வசதி

(அ) இடம்பெயர்ந்தவர்களுக்கு புதிய பிரதேசத்தில் முஞ்பே தொடர்பு இருந்தால், காலியான - கைவிடப்பட்ட - நண்பர் உறவினர் என்ற வகையில் இருப்பிடங்களை ஒழுங்கு செய்யமுடியும். ஆனால் சிறு வீடுகளில் பல குடும்பங்கள் நெரிசலாக இருப்பதைக் காணமுடியும். பலர் வீட்டிற்கு வெளியே பொழுதைக் கழிக்கின்றார்கள். மாரி காலத்தில் புதிய பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டும்.

(ஆ) புதிய பிரதேசத்தில் எதுவித தொடர்பும் அற்றவர்கள். ஆனால் வாயாடியானவர்கள். பொது இடங்களுக்குச் சென்று தற்காலிக முகாம்களை ஏற்படுத்துவதற்கு வழிகோலினார்கள். படிப்படியாக முகாமாக மாறி பலரின் கவனத்தை ஈர்க்கத் தொடங்கியது. அநேகமாக பாடசாலைகள், கிறிஸ்தவ தேவாலயங்கள், சனசமூக நிலையங்கள், மடங்கள் முதலியன இவற்றுள் அடங்கும்.

(இ) புதிய இடத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாத அப்பாவிகள் வீதி ஓரங்களில், மர நிழல்களில், பஸ்தரிப்பு மண்டபங்களில் சில நாள்களைக் கழித்த பின்பே முகாம்களுக்குச் சென்றார்கள்.

யாழ்.செயலகத்தில் இடம்பெயர்வுக்கு தயார்ப்படுத்தல் என எத்தனையோ கூட்டங்கள் நடத்தப்பட்டன. ஆனால் இடம்பெயர்ந்து, பரிதாப நிலையில் வரும் ஓர் அப்பாவிக் குடும்பத்துக்கு எங்கே போக வேண்டும் என்று வழிகாட்டுவதற்குரிய ஏற்பாடு இருக்கவில்லை. படையினரின் பணிப்புரையை மட்டும் நிறைவேற்றுவதற்காக பிரதேச எல்லையில் அமைந்துள்ள சோதனைச் சாவடியில் கிராமஅலுவலர்கள் பதிவுகளை மேற்கொண்டார்கள். முள்ளி, யார்க்கரு ஆகிய இடங்களில் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்தனர்.

இடம்பெயர்ந்தோர் தொகை அதிகரிக்கும்போது எந்த பொது இடங்களில் தற்காலிக முகாம்கள் அமைக்கவேண்டும் என முன்கூட்டியே தெளிவான திட்டம் வகுக்கப்படவில்லை. மாறாக, மக்கள் தங்கிய இடங்களை பின்னர் முகாம்களாக அங்கீகரிப்பதற்கு பிரச்சினை எழுப்பப்பட்டது.

**குடாநாட்டில் பட்டினியால் எவரும் இறக்கவில்லை என்ற காரணத்தைக்காட்டி சர்வதேச நிறுவனங்கள் அவற்றின் பொறுப்பை தட்டிக் கழித்துவிடமுடியாது.**

மூன்று நாள் சமைத்த உணவு வழங்குவதற்குரிய ஏற்பாடுகள்கூட அநேக இடங்களில் இருக்கவில்லை. ஊர்மக்களும் - இளைஞர்களும் நிதி - பண்டங்கள் திரட்டியே வழங்கினர்.

முகாம்களை ஒழுங்காக நிர்வகிக்கும் கட்டமைப்பு இரண்டு மாதத்தின் பின்பே உருவாக்கப்பட்டது.

தற்காலிக குடியமர்வுக்கென அங்கீகரிக்கப்பட்ட 2 ஆயிரம் ரூபா இன்னும் வழங்கப்படவில்லை.

### உணவு

போஷாக்கைக் கருத்தில் கொள்ளாத மூன்று நேர உணவுக்கு 5 பேர் கொண்ட குடும்பமொன்றிற்கு 5 ஆயிரம் ரூபா மட்டில் ஒரு மாதத்துக்கு தேவைப்படும். அரசின் உலர் உணவு நிவாரண உதவி இதில் கால் பங்கையே ஈடுசெய்யும். மிகுதிக்கு என்ன செய்கின்றார்கள், கூலித் தொழில்களைத் தேடி அலைகின்றார்கள். உற்பத்தி தொழில்களான விவசாயம், மீன்பிடி சிறுகைத்தொழில் ஆகியன முடங்கிப்போய் இருப்பதனால் கூலித்தொழில் வாய்ப்பு இல்லை. சிறு நகைகளை விற்று சிலர் செலவு செய்கின்றார்கள். ஒரு வழியும் இல்லாதவிடத்து மூன்று நேர உணவை இரண்டு அல்லது ஒரு நேரமாக்கி அரைப் பட்டினியில் சீவியம் நடத்துகிறார்கள். கிராமங்களுக்குச் சென்றால் இந்த உண்மையைப் புரிந்துகொள்ளலாம்.

துரதிர்ஷ்டவசமாக இங்குள்ள சர்வதேச நிறுவனங்கள் அடிமட்டத்துக்கு இறங்கி பிரச்சினையை ஆய்வுசெய்வதற்கு தயாராக வில்லை. மற்றைய நாடுகளைப் போல் பட்டினிச்சாவினால் மக்கள் ஒருவரும் இறக்கவில்லை எனக் கூறி பொறுப்பைத் தட்டிக்கழிக்கின்றன. உணவுக்கு மக்கள் படும் பாட்டை வெளிக்கொணர்ந்து சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியை இதுவரை அவர்கள் நாடவில்லை. அரசே உணவுக்குப் பொறுப்பு எனக்கூறி பாராமுகமாக இருக்கின்றார்கள். அரசின் அனுசரணையோடு இயங்குவதால் அதன் தவறைச் சுட்டிக்காட்ட பின் நிற்கின்றார்கள்.

வருமானம் உருவாக்கும் தொழில்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதனால் இடம்பெயராத மக்களும் தமது சீவனோபாயத்திற்கு கஷ்டப்படுகின்றார்கள். ஆகவே தடைகள் நீக்கப்பட்டு தொழில் வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்வரை முழு அளவிலான நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என மக்கள் ஏங்கித் தவிக்கின்றனர்.

### உலர் உணவு நிவாரணம்

மே மாதத்தில் இடம்பெயாந்த பெரும்பாலான தென்மராட்சி மக்களுக்கு 3 நாள் சமைத்த உணவும், உலர் உணவும் வழங்கப்படவில்லை. ஜூன் மாத நிவாரணம் வழங்கப்பட்டதிலிருந்தே சமையலைத் தொடங்கினார்கள். இம் மக்களின் பரிதாப நிலையை அரச அதிபரின் கவனத்திற்கு மே மாத இறுதியில் நாம் கொண்டுவந்தபோதும் ஜூன் மாத நிவாரணம் வழங்கும்போதும் மே மாதத்திற்குரியதும் சேர்த்து வழங்கப்படவில்லை. பல்வேறு அழுத்தங்களினாலேயே விடுபட்டவர்களுக்கு மே மாதத்திற்குரிய நிவாரணம் வழங்க ஒப்புக்கொண்டனர்.

பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி கிராமங்களில் தங்கியுள்ளவர்களுக்கு மே, ஜூன் மாத நிவாரணங்கள் ஜூலை மாதம் வரையிலும் வழங்கப்படவில்லை. பொதுவாக சில அசமந்த அரச ஊழியர்களினால் சில இடம்பெயர்ந்த குடும்பங்கள் மாதாந்த நிவாரணம் பெறாமல் அல்லலப்பட்டன.

நிவாரணத்திற்கு சில கிளைகளில் தரமற்ற அரிசி விநியோகிக்கப்பட்டதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இடம்பெயர்ந்தவர்களானதால் எதிர்ப்பைத் தெரிவிக்கமுடியாத பரிதாப நிலையில் இருக்கின்றார்கள். நாம் இதுபற்றி வினவிய போது ப.நோ.கூ.சங்கங்கள் அரச களஞ்சியத்தின் மீதும் அரச களஞ்சியம் ப.நோ.கூ.சங்கங்களின் மீதும் பொறுப்புகளைச் சுமத்தின.

(தொடரும்)

### யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம்

### உதயவாக்கு

**நாணயம் ஓசைப்படுவதற்காக அவைகளில் மட்டமான உலோகங்களைக் கலக்கிறார்களல்லவா? மனிதனுடைய பண்பிலும் நன்மையும், தீமையும் இப்படித் தான் கலந்திருக்கின்றன. இந்தக் கலப்பினால்தான் வாழ்க்கைச் சங்கீதம் இனிமை பெறுகின்றது.**

*- காண்டேகர்*

### நாளை

**ஆடி 14**

**சனிக்கிழமை**


*திதி:* திரயோதசி
பிற்பகல் 1.42 வரை
*நட்சத்திரம்:* திருவாதிரை
பிற்பகல் 4.31 வரை
*சுபநேரம்:* 3.03 - 4.33
*ராகுகாலம்:* 9.33 - 10.33
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை- 2000
## வினாத்தாள் இல. 6


தரம் 5 பகுதி I நேரம் 45 நிமி.

★ **பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1) இக்கோட்டின்மேல் உள்ள சில்லை முன்னால் உருட்டினால், கோட்டின் இறுதி அடையாளத்தில் நிற்கும் இலக்கம் எது?




2) அருகே உள்ள பாத்திரம் 5 லீற்றர் கொள்ளக் கூடியது. அதனை முற்றாக நிரப்புவதற்கு தேவையான அளவுத் தொகுதியைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.





1) 500ml, 300ml 2) 3l, 750ml
3) 2l 250ml 4) 4l 750ml

3) பெறுமதி குறைந்த பின்னத்தின் கீழ்க் கோடிடுக.
1) $\frac{1}{3}$ 2) $\frac{1}{4}$ 3) $\frac{1}{5}$ 4) $\frac{1}{2}$

4) பெறுமதி குறைந்த தசமதானத்தைச் சுற்றி வட்டமிடுக.
1) 0.124 2) 0.065 3) 0.79 4) 0.9

★ **கீழே உள்ள கடிகார முகங்களில் தரப்பட்டிருப்பது ரமேஷ் பாடசாலைக்குப் புறப்பட்ட நேரமும் பாடசாலையிலிருந்து வீட்டுக்கு வந்த நேரமும், இரவு நித்திரைக்குச் செல்லும் நேரமும் ஆகும்.**



I II III

(5) இந்நேரங்களை 24மணிக்கடிகார (நியம) நேரமாகத் தருக.
I........................ II........................ III....................

6) மேலே உள்ள கடிகார முகங்களை முகம்பார்க்கும் கண்ணாடியினூடாக பார்க்கும்போது காட்டும் நேரத்தை எழுதுக? I........................ II........................ III....................

(7) கண்ணாடியில் பார்த்தாலும் நேரே பார்த்தாலும் ஒரே மாதிரியான நேரத்தைக் காட்டும் நேரங்களைக் குறிப்பிடுக.
..............................................................................................

★ **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள சொற்களுக்குப் பொருத்தமான பதத்தைக் கொண்ட கூற்றைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

8) கூரையிலிருந்து **ஒடு** விழுமுன் என்னை வெளியே **ஒடு** என்றார் அம்மா.
1) ஓட்டப் போட்டி, ஓட்டையாதல் 2) ஓடம், வேகம்
3) கூரைஓடு, விரைந்து செல் 4) சிரட்டைஓடு, ஓடல்

9) **ஆடு** நின்ற தோட்டத்தில் தங்கையை **ஆடு** என்றான் அண்ணா.
1) ஆடுதல்,பழகுதல் 2) ஆட்டம்,நடிப்பு
3) மிருகம்,நடனம் 4) ஆடல்,பாடல்

10) **குடி**, **குடி**யைக் கெடுக்கும் என்றார்
1) குடித்தல்,கடித்தல் 2) குடி,மீண்டும்குடி
3) போதை,குடும்பம் 4) சாராயம்,கள்ளு

★ **பின்வரும் வாக்கியங்களில் காரணம் முன்னாலும் விளைவு பின்னாலும் அமைந்திருந்தால் 'சரி' எனவும் அவ்வாறு இல்லை யாயின் 'பிழை' எனவும் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

11) கமலா அக்கறையுடன் படித்தமையால் பரீட்சையில் சித்தியடைந்தாள். ( )
12) காற்று நன்றாக வீசியது: சிறுவர் பட்டம் விட்டு மகிழ்ந்தார்கள். ( )
13) விமலி மயங்கி விழுந்தாள். அவள் காலையில் சாப்பிடவில்லை. ( )
14) ஈவிரக்கமற்ற யுத்தத்தினால் பல அப்பாவிகளும் உயிரிழக்கின்றார்கள். ( )

★ **கீழ் உள்ள தகவல்களை வாசித்து அதன் பின்னர் வரும் வினாக்களுக்கு விடை தருக.**


ஒரு கல்வி நிலையத்தில் A,B,C,D,E என்னும் ஐந்து மாணவர்கள் மாலை வகுப்பில் சேர்ந்து கொண்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வாரத்தில் இரு நாட்கள் வகுப்புக்குச் செல்வதில்லை. அதன்படி -

- A என்பவர் திங்கட்கிழமையும் சனிக்கிழமையும் மாலை வகுப்பிற்குச் செல்வதில்லை.
- B என்பவர் செவ்வாய்க்கிழமையும் வெள்ளிக்கிழமையும் மாலை வகுப்பிற்குச் செல்வதில்லை.
- C என்பவர் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் மாலை வகுப்பிற்குச் செல்வதில்லை.
- D என்பவர் புதன்கிழமையும் வியாழக்கிழமையும் மாலை வகுப்பிற்குச் செல்வதில்லை.
- E என்பவர் செவ்வாய்க்கிழமையும் வியாழக்கிழமையும் மாலை வகுப்பிற்குச் செல்வதில்லை.


15) வெள்ளிக்கிழமை மாலை நேர வகுப்பிற்குச் செல்லாதவர்கள் யார்? ..............................................

16) இந்த ஐவரில் திங்கட்கிழமை எத்தனைபேர் மாலை வகுப்பிற்குச் செல்லவில்லை?..............................
17) ஐவரும் மாலை வகுப்பிற்குச் சென்ற நாள் எது?................
18) அதிகமானவர்கள் மாலை வகுப்பிற்குச் செல்லாத நாள் எது?..............................................
19) சனிக்கிழமை மாலை வகுப்பிற்கு சென்றவர்கள் எத்தனை பேர்?..............................................


★ **இரு வடிவங்களிலும் குறிக்கப்பட்ட அளவுகளை அவதானித்து விடை அளிக்கவும்.**




20) பரப்பளவு கூடிய வடிவம் எது? ..............................
21) சுற்றளவு கூடிய வடிவம் எது? ..............................
22) ஒரு பக்க நீளம் 6செ.மீ அளவுடைய ஒரு சதுரத்தை இரு சமபகுதிகளாக மடித்து வெட்டினால் உருவாகும் வடிவம் யாது? ..............................
அதன் நீளம்.............. செ.மீ அகலம்.................. செ.மீ


23) 
இவ்வுருவில் உள்ள சதுரங்கங்களினால் எத்தனை சதுர முகிகள் உருவாக்கலாம்?
..............................

★ **லட்டு உருண்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் விதம் இங்கே காட்டப்பட்டுள்ளது.**





24) ஆறாவது நிரையில் வைக்கப்பட வேண்டிய லட்டு உருண்டைகளின் எண்ணிக்கை யாது? ..............................
25) இதே மாதிரி 7 நிரைகளில் லட்டு உருண்டைகளை அடுக்குவதற்குத் தேவையான மொத்த லட்டு உருண்டைகளின் எண்ணிக்கை யாது?..............................


★ **கீழே மூன்று வாக்கியங்கள் காணப்படுகின்றன. அவ்வாக்கியங்களின் சொற்கள் ஒவ்வொன்றும் சதுரமுகங்கள் மூலம் குறிக்கப்படுகின்றது. ஒரு சொல் ஒரு சதுரமுகத்தின் மூலம் காட்டப்படுகின்றது. எனினும் முகங்கள், சொற்களின் ஒழுங்கிலே காட்டப்படவில்லை.**






இதன்படி கீழே காட்டப்பட்டுள்ள சொற்களுக்கு உரிய முகங்களைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

26) சிறுவர்கள் 

27) கசப்பை 

28) வெறுப்பார்கள் 

29) இனிப்பை 

30) புளிப்பை 

★ **பின்வரும் பகுதியை வாசித்து விடை**

*எனது பிறந்தநாள் நாளையென்று அ*

மேலே கூறப்பட்ட விடயதிலிருந்து சொற்களுக்குரிய தமிழ் சொல்லை


31) BIRTHDAY ..................
33) TOMORROW ..................
35) MOTHER ..................


★ **பின்வரும் கவிதையை வாசித்து கீழ் எழுதுக.**

*வானும் கனல் சொரியும் -*
*மண்ணும் கனல் சுட்டும்*
*கானலில் நான் நடந்தேன் -*
*காணும் விருப்பத்தால்*

36) இப்பாடல் கூறப்படு காலம்
1) வெயில் 2)மழை 3) பனி
37) இங்கு கனல் சொரியும், கன கருத்து
1) வெப்பத்தை வீசும், வெப்
2) நெருப்பை வீசும் தீ பற்றி
38) இக்கவிஞர் ஏன் கானலில் ந
1) கானலைச் சகிப்பதற்காக
2) நிழல் காணும் விருப்பத்தி
39) சுகாதாரமான நிழல் கிடைக்
1) மரநிழல் 2) ஸ்தாபிப்பி

★ **கீழே A,B,C,D,E உபகரணங்கள் உபகரணங்களின் பயன்பாடுகளைச் நேரே உரிய எழுத்தைப் புள்ளிக் கோ**




40) திரவங்களின் கன அளவை
41) மின்குமிழ் ஒன்றை ஒளிரச் செ
42) சூழல் வெப்பநிலையை அளத்
43) வேலையொன்றை இலகுவாக
44) வெப்பத்தினால் கம்பி விரிவடை
45) E எனும் உபகரணத்தில் பய எது? ..............................
46) இவ்வுரு காட்டும்  கருவியின் பெயரை குறிப்பிடுக.
..............................
47) இதில் ஒலி ஏற்படுவது
1) கம்பி அதிர்வதன் மூலம் 2
3) வளி அதிர்வதன்மூலம்
48) மேலே குறிப்பிட்ட உபகரண தக்கூடிய, சுற்றாடலில் இருந்து கருவிகள் இரண்டு எழுதுக.
..............................

★ **பின்வரும் நொடிகளுக்குரிய விடை**

49) நான் பிரயாணம் செய்வது ஏராளமான பொருட்களையும் செல்ல முடியும். நான் யார்?
50) பகற்காலங்களிலும் அதிகமா சிறுவர்களும் பெரியோர்களும் கொள்வர். ஒளியும் ஒலியும் எ வெளியாகின்றன. எமது நாட்ட விபரங்களையும் என்மூலம் யார்? ..............................

## பகுதி II

★ பின்வரும் விடயம் அரச விருதுபெற் தல் ஆகும். இதை வாசித்து வினாக்

**அரச விருது பெற்ற ந**

அரச விருதுபெற்ற ஏழு நாடகங்கள் பின்வரும் ஒழுங்கின்படி பிற்பகல் 6.3

| திகதி | நாடகம் | நெறியாள்ன |
|---|---|---|
| 2000 மே10 | நவீன அரிச்சந்திரன் | திரு.பி.விசுவம் |
| மே11 | நாடோடி | திரு.க.கிருஷ்ண |
| மே12 | புதுமைப்பெண் | திரு.அமண்டுவண் |
| மே13 | நீதான் என் மகள் | திரு.ம.குமரன் |
| மே14 | எங்கே நிம்மதி? | திரு.ப.கண்ணத |
| மே15 | யார் குற்றம்? | திரு.எஸ்.இராம |
| மே16 | கலங்கம் எனது காவியம் | திரு.மு.ஜெயரா |

பிரவேசக் கட்டணம் ருப
அனுமதிப்பத்திர

ய வாசித்து விடை அளிக்கவும்.

*நாளை என்று அம்மா மாமாவிடம் கூறினாள்.*

விடயத்திலிருந்து பின்வரும் ஆங்கிலச்
தமிழ்ச் சொல்லை எழுதுக.

........................ 32) UNCLE ....................

W ........................ 34) MY....................

........................

யை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை

*ல் சொரியும் - தரை*
*னல் எழுப்பும்*
*ான் நடந்தேன் - நிழல்*
*நப்பத்தினால்*
றப்படும் காலம்
2)மழை 3) பனி
சொரியும், கனல் எழுப்பும் என்பதன்


தை வீசும், வெப்பத்தை உண்டுபண்ணும்
வீசும். தீ பற்றி எரியும்
ஏன் கானலில் நடந்ததாகக் கூறுகிறார்.
ச் சகிப்பதற்காக
ணும் விருப்பத்திற்காக.
நிழல் கிடைக்கும் இடம்
2) பஸ்தரிப்பிடம்

**உபகரணங்கள் காட்டப்பட்டுள்ளன. இந்த பயன்பாடுகளைக் குறிக்கும் வசனங்களுக்கு த்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**




கன அளவை அளத்தல்.................................
ன்றை ஒளிரச் செய்தல்.................................
நிலையை அளத்தல்.................................
ன்றை இலகுவாகச் செய்தல்.................................
ல் கம்பி விரிவடைதல்.................................
பகரணத்தில் பயன்படுத்தப்படும் திரவம்
.................................

டும்
பெயரைக்



.................................

ஏற்படுவது
ர்வதன் மூலம் 2) தோல் அதிர்வதன்மூலம்
ர்வதன்மூலம்
பிட்ட உபகரணத்தைப் போல பயன்படுத்
றாடலில் இருந்து இலகுவாகக் கிடைக்கும்
ரண்டு எழுதுக.

...... .................................

**ளுக்குரிய விடையை எழுதுக.**

னம் செய்வது கடலில் ஆகும். எனக்கு
பொருட்களையும், மக்களையும் சுமந்து
ம். நான் யார்? .................................
ரிலும் அதிகமாக இராக்காலங்களிலும்
பெரியோர்களும் என்னைச் சூழ்ந்து
ரியும் ஒலியும் என்னிலிருந்து ஒரே நேரத்தில்
ன. எமது நாட்டைப்போல வேறு நாடுகளின்
ும் என்மூலம் தெரிந்து கொள்ளலாம். நான்
.................................

## பகுதி II

**நேரம் 1 மணி 15 நிமி.**

**அரச விருதுபெற்ற ஒரு நாடகவிழா அறிவித் வாசித்து வினாக்களுக்கு விடை அளிக்கவும்.**

### பெற்ற நாடகங்கள் ஏழு


**ஏழு நாடகங்கள் 'வீரசிங்கம்' மண்டபத்தில் டி பிற்பகல் 6.30 மணிக்கு மேடையேறும்.**

| | நெறியாள்கை | பிரதம விருந்தினர் |
|---|---|---|
| ன் | திரு.பி.விசுவம் | திரு.கே.பாலச்சந்தர் (பிரபல தென்னிந்திய பட நாடக இயக்குநர்) |
| | திரு.க.கிருஷ்ணராஜா | கனேடிய உயர் ஸ்தானிகர் |
| | திரு.அ.மணிவண்ணன் | யப்பானிய உயர் ஸ்தானிகர் |
| ள் | திரு.ம.குமரன் | இந்திய உயர் ஸ்தானிகர் |
| | திரு.ப.கண்ணதாசன் | கௌரவ கலாசார அமைச்சர் |
| | திரு.எஸ்.இராமதாஸ் | கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் |
| ம் | திரு.மு.ஜெயராஜி | திரு.எ.அலெக்ஸாண்டர் (பிரபல நாடக நடிகர்) |

**ட்டணம் ரூபா 100/-.**
**மதிப்பத்திரம் மண்டப வாயிலில்.**

1) இந்த நாடகவிழா நடைபெறும் இடம் எது?
.................................
2) நாடகம் பார்ப்பதற்காக அனுமதி பெறவேண்டிய இடம் எது? .................................
3) நாடகம் எத்தனை மணிக்கு ஆரம்பமாகும்?
.................................
4) அதனை நியம நேரத்தில் எழுதுக.
.................................
5) மே மாதம் 13 ஆந் திகதி நடைபெறும் நாடகம் எது?
.................................
6) "நாடோடி" நாடகத்தை நெறியாள்கை செய்பவர் யார்?
.................................
7) 'நவீன அரிச்சந்திரன்' நாடகத்திற்குப் பிரதம விருந்தினராக அழைக்கப்பட இருப்பவர் யார்?
.................................
8) இறுதி நாள் மேடையேறும் நாடகம் எது?
.................................
9) திரு. ப. கண்ணதாசன் அவர்கள் நெறியாள்கை செய்யும் நாடகம் எது? .................................
10) கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பிரதம விருந்தினராக வந்து கண்டுகளிக்க இருக்கும் நாடகம் எது?
.................................
11) யப்பானிய உயர்ஸ்தானிகர் யார் நெறியாள்கை செய்த நாடகத்திற்கு பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டுள்ளார்? .................................


★ **வெதுப்பகம் ஒன்றினால் அகதிமுகாம் ஒன்றிற்கு ஒரு வாரத்தில் விற்கப்பட்ட பாணின் விவரம் பின்வருமாறு:-**




12) மிகக்குறைவான பாண் விற்கப்பட்ட நாள்கள் எவை?
.................................
13) மிகக் கூடுதலான பாண் விற்கப்பட்ட நாள் எது?
.................................
14) அவ்வாரத்தில் விற்கப்பட்ட மொத்த பாண்களின் எண்ணிக்கை யாது?.................................
15) பாண் ஒன்றின் சராசரி நிறை 350 கிராம் எனின் வியாழனன்று விற்கப்பட்ட பாணின் மொத்த நிறையைக் காண்க? ................ Kg ......................g
16) பாண் ஒன்றின் விலை ரூபா 8.50 எனின் திங்கட்கிழமை விற்கப்பட்ட பாண்களுக்கான மொத்த விலை என்ன? ................ ரூபா ......................சதம்
17) விற்பனையாளருக்கு பாண் ஒன்றை விற்பதால் ரூபா1.50 இலாபம் கிடைக்கிறது எனின் செவ்வாய்க்கிழமை அவருக்கு எவ்வளவு இலாபம் கிடைத்திருக்கும்? ................ ரூபா ......................சதம்
18) பாண் ஒன்றை நான்கு சமதுண்டுகளாக வெட்டி பங்கிடப்பட்டது எனின் புதன்கிழமை பங்கிடப்பட்ட பாண் துண்டுகளின் எண்ணிக்கை யாது? .................................

★ **சுமி 50 செ.மீ அளவுள்ள ஒரு நேரிய கம்பித்துண்டு ஒன்றில் படத்தில் காட்டப்பட்டவாறு மெழுகுவர்த்தித் துண்டுகளை சம அளவான இடைவெளிவிட்டு பொருத்தினாள். ஒரு முனையை மெழுகுவர்த்திச் சுவாலையினால் சூடாக்கினாள். இந்தப் பரிசோதனையை அவதானித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

19) மேலே படத்தில் இலக்கமிடப்பட்ட பகுதிகளின் பெயரை எழுதுக.




1.................................
2.................................
3.................................

20) இப்பரிசோதனையிலிருந்து சிறிது நேரம் செல்ல மெழுகுவர்த்தி துண்டுகள் கீழே விழுந்தன. முதலாவதாக விழுந்த மெழுகுத்துண்டின் எழுத்தை எழுதுக? ..................
21) இறுதியாக விழுந்த மெழுகுத்துண்டின் எழுத்து யாது?
.................................
22) இப்பரிசோதனையில் கம்பிக்கு பதிலாகத் தடி ஒன்றைப் பாவித்து இருந்தால் என்ன நடந்திருக்கும்?
.................................
23) இப்பரிசோதனையின் மூலமாக நாம் அறிந்து கொள்வது என்ன?
.................................

★ **பின்வரும் தமிழ்ச் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொற்களைக் கண்டு பிடித்து வட்டமிடுக.**

உதாரணம் : BAT
24) பந்து
25) வீடு
26) நண்பன்
27) பூனை
28) பாவை


| | | | | | |
|---|---|---|---|---|---|
| L | F | B | A | L | L |
| T | R | A | I | N | H |
| X | I | B | A | T | O |
| M | E | Z | O | W | U |
| U | N | C | A | T | S |
| E | D | O | L | L | E |

★ **இலக்கம் 29 -35 வரையிலான வினாக்களுக்காக சில பாடல்கள் தரப்பட்டுள்ளன. அப்பாடல்களைப் பாடியவர்களைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.**

| | |
|---|---|
| சுத்தானந்த பாரதியார் | தேசிகவிநாயகம்பிள்ளை |
| உலகநாதர் | பாரதியார் |
| அன்புமுகைதீன் | எச்.எம்.ஷம்ஸ் |
| சோமசுந்தரப்புலவர் | ஏ.இக்பால் |

29) "அம்மா நான் விளையாடப்போறேன்" .................................
30) "பாடுபடுபவர்க்கே இந்த பாரிடம் சொந்தமையா"
.................................
31) "ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே".................................
32) "ஓடி விளையாடு பாப்பா - நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா".................................
33) "சேற்றில் விழுந்தெழுந்தாவி பதைத்துடல் தேய வியர்வையைச் சிந்தி நிதம்" .................................
34) "தெருவெல்லாம் வெடிமுழக்கம் தீனோரின் மறை முழக்கம்".................................
35) "ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்"
.................................

★ **கீழே தரப்பட்டுள்ள படத்தைப் பார்த்து அது என்ன விளையாட்டு என்பதை எழுதுக.**

36)  ......................... 37)  .........................

38)  ......................... 39)  .........................

★ **ஆக்கத் தொழிற்பாடுகளில் ஒன்றான தையல் அலங்கார வேலைப்பாடுகளில் பின்வரும் செயற்பாடுகளில் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை வெற்றுக் கூட்டினுள் எழுதுக.**

| | | |
|---|---|---|
| 40) சோம்தையல் | ☐ | 1.இரு துண்டுத் துணிகளைப் பொருத்தல். |
| 41) விஸ்பம் தையுல் | ☐ | 2.கிழிந்த ஆடையைத் தைத்தல். |
| 42) நரம்புத் தையல் | ☐ | 3.சேலைக்கரை மடித்துத் தைத்தல். |
| 43) கம்பளித்தையல் | ☐ | 4.அலங்கார உருவில் இலை, தண்டு என்பவற்றைத் தைத்தல். |
| 44) மீன்முள்ளுத் தையல் | ☐ | 5.அலங்கார பூ வேலைப்பாடு செய்ய. |
| 45) சங்கிலித்தையல் | ☐ | 6.தலையணை உறையொன்றில் பொம்மை அலங்காரம் செய்தல். |

★ **மனித வளர்ச்சிக்குத் தடையாக அமையும் காரணிகளில் போஷாக்கின்மையும் அதனால் ஏற்படும் நோய்களும் முக்கிய பங்கை வகிக்கின்றன. பின்வரும்அட்டவணையில் முதலாம் நிரலில் நோய்களின் பெயர்கள் உள்ளன. அந்த நோய்கள் போஷணைக் குறைபாடு/நோய்க்காவிகள் மூலம் பரவுதல் என அவதானித்து சரியான நிரலில்(✓) என அடையாளமிடுக.**

| | போஷணைக் குறைபாடு | | | | | | நோய்க் காவிகள் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நோய்கள் | இரும்பு | உயிர்ச்சத்துA | உயிர்ச்சத்துB | உயிர்ச்சத்துC | உயிர்ச்சத்துD | அயடீன் | ஈ | நுளம்பு | வைரசு |
| 46) வயிற்றோட்டம் | | | | | | | | | |
| 47) வாந்திபேதி | | | | | | | | | |
| 48) மலேரியாக்காய்ச்சல் | | | | | | | | | |
| 49) யானைக்கால் நோய் | | | | | | | | | |
| 50) தடிமன் | | | | | | | | | |
| 51) சின்னமுத்து | | | | | | | | | |
| 52) இரத்தச் சோகை | | | | | | | | | |
| 53) தொண்டை வீக்கம் | | | | | | | | | |
| 54) மாலைக்கண் | | | | | | | | | |
| 55) என்புருக்கிநோய் | | | | | | | | | |
| 56) பெரிபெரி | | | | | | | | | |

★ **'நான் புலமைப்பரிசில் சித்தியடைந்து யப்பான் சென்றால்' என்னும் தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

.................................
.................................
.................................
.................................
.................................
.................................

**தயாரிப்பு:-**
**யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் குழு**

## 1981 இல் எரியூட்டப்படுவதற்கு முன்

# யாழ். நூலகத்தில் இருந்த பத்திரிகைகளின் நுண்படப் பிரதிகளை அமெரிக்கா வழங்கியது

கொழும்பு,ஜுலை28

1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்பு அங்கு இருந்த முக்கிய பத்திரிகைகளின் நுண்படப் பிரதிகளை அமெரிக்கா இலங்கையிடம் கையளித்துள்ளது.

இலங்கைக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் நிலவி வரும் நீண்ட கால உறவுகளை மேலும் மேம்படுத்தும் நோக்கில் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஷோன்.இ.டொனலி ஆகியோர் பரிசுப் பொருள்களையும் நன்கொடைகளையும் பரிமாறிக் கொண்டனர்.

கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற இராப்போசண விருந்துபசாரத்தின் போதே மேற்படி நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது.

இந்த நிகழ்ச்சியின் போது அமெரிக்க செய்மதிகளின் மூலம் எடுக்கப்பட்ட இலங்கையின் படங்கள் அடங்கிய தொகுதியொன்றையும் 1981 ஆம் ஆண்டு எரிக்கப்பட்ட யாழ். நூலகத்தில் இருந்த முக்கிய பத்திரிகைகளின் நுண்படப் பிரதிகளையும் (Micro film) அமெரிக்க தூதுவர் ஷோன்.இ.டொனலி அமைச்சர் லஷ்மன் கதிர்காமரிடம் கையளித்தார்.

இலங்கையின் செய்மதிப்படங்கள் வெளிவிவகார அமைச்சின் விசேட கண்காட்சி கூடத்தில் வைக்கப்படவுள்ளன. பத்திரிகைகளின் நுண்படப் பிரதிகளின் பிரதி ஒன்று கொழும்பு தேசிய நூலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்து ஓர்கன், இந்து சாதனம், ஈழகேசரி மற்றும் 1841ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 1980ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் வரை வெளிவந்த 'மோர்னிங் ஸ்டார்' ஆகிய பத்திரிகைளின் நுண்படப் பிரதிகளே அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்கா தனது ஆசிரியர்கள், மற்றும் மிஷனறிகள் மூலம் யாழ். குடாநாட்டுடன் கொண்டிருந்த நீண்டகால உறவுகளை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது என அமெரிக்க தூதுவர் குறிப்பிட்டார்.

மேற்படி பத்திரிகைகளின் நுண்படப் பிரதிகளையும், பரிசுப் பொருள்களையும் யாழ். நூலகப் புனரமைப்புக் குழுவின் தலைவர் என்ற ரீதியிலும் இலங்கையின் சார்பாகவும் யாழ் குடாநாட்டு மக்களின் சார்பாகவும் அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் பெற்றுக் கொண்டார். அத்துடன் பல நினைவுப் பரிசுகளையும் அவர் அமெரிக்கத் தூதுவருக்கு வழங்கினார்.

(ஐ-6)

## அமெரிக்கப் பிரதிநிதி வருகை

கொழும்பு,ஜுலை28

பொதுத் தேர்தலைக் கண்காணிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக அமெரிக்காவில் இருந்து இரு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் கொழும்பு வந்து சேர்ந்தனர்.

அரச - எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள் மற்றும் தேர்தல் ஆணையாளர்களை இவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இதேவேளை -

வன்செயல் எதுவும் இன்றி நேர்மையான முறையில், சுதந்திரமான தேர்தலை நடத்துவதற்காக கட்சித் தலைவர்களுக்கும், அங்கத்தவர்களுக்கும் அறிவுறுத்தல்களை வழங்க விசேட நிகழ்ச்சிகளை 'சுதந்திரமான, நேர்மையான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கை அமைப்பு' ஏற்பாடு செய்து வருகிறது. இது தொடர்பான கருத்தரங்குகளையும் இந்த அமைப்பு நடத்தியுள்ளது. மதகுருமார் மற்றும் சமூகத் தலைவர்களின் உதவியுடன் மாகாண சபைகள் ஊடாகவும் கருத்தரங்குகள் நடத்தவுள்ளது.

(ஐ-9)

# யாழ். கட்டளைத் தளபதி பதவியில் இருந்து ஜெனரல் ஜானக பெரேரா விடுவிப்பு!

வடபகுதிக்கான சகல நடவடிக்கைகளுக்குமானகட்டளைத்தளபதி (ஓ.ஓ.சி) பதவியிலிருந்து இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆனையிறவு படைத்தளம் விடுதலைப் புலிகளின் வசம் வீழ்ச்சியடைந்ததைத் தொடர்ந்து அவசர அவசரமாக மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார். அவரது கட்டளைக்கு அமையவே குடாநாட்டுப் படை நடவடிக்கைகளும் இடம்பெற்று வந்தன.

கடந்த வாரம் முதல் இவர் அந்தப் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதால் வன்னி தவிர்ந்த ஏனைய பகுதிகளில் நடைபெறும் படை நடவடிக்கைகள் இனிமேல் யாழ். மாவட்ட இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் அன்ரன் விஜஜேந்திராவின் நேரடி உத்தரவின் கீழ் மேற்கொள்ளப்படும்.

ஆனையிறவு வீழ்ச்சியைத் தொடர்ந்து குடாநாட்டில் தங்கள் நடவடிக்கைகளைப் புலிகள் தீவிரப்படுத்தியபோது மேஜர் ஜெனரல் ஜானகபெரேராவுடன்யாழ். மாவட்டப் புதிய தளபதியாக மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்மாற்றப்பட்டிருந்தார்.

எனினும் தற்போது மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவும் குடாநாட்டில் இருந்து வன்னிப் பிராந்திய கட்டளைத் தளபதியாக இடம்மாற்றப்பட்டுள்ளதுடன் வன்னித் தளபதியான மேஜர் ஜெனரல் அன்ரன் விஜஜேந்திரா குடாநாட்டுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்தவாரம் குடாநாட்டிலிருந்து முக்கிய சந்திப்பிற்காக ஜெனரல் ஜானக பெரேரா கொழும்பு வந்த போதே அவர் வடபகுதிக்கான ஓ.ஓ.சி பதவியிலிந்து விடுவிக்கப்பட்டது குறித்து அவரிடம் நேரில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதமளவில் குடாநாட்டில் ஏற்பட்ட பாரிய அச்சுறுத்தல்கள் தற்போது இல்லை எனவும் -

இதனால் ஓ.ஓ.சி பதவிக்கான அவசியம் அங்கு இல்லை எனவும் -

ஜெனரல் ஜானக பெரேராவிடம் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சிறிலால் வீரசூரிய கூறியதாகத் தெரிகின்றது.

மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா தற்போது கொழும்பு அலுவலகத்தில் இராணுவத்தின் சிரேஷ்ட அதிகாரியாகக் கடமையில் ஈடுபட்டுள்ளார்.

(உ-6)

# மின்சாரசபை ஊழியர்கள் சம்பள உயர்வு கேட்கின்றனர்

## கொழும்பில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜுலை28

இலங்கை மின்சாரசபை ஊழியர்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை நண்பகல் கொழும்பு புறக்கோட்டையில் உள்ள தலைமைக் காரியாலயம் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை மின்சாரசபை ஊழியர் அனைவருக்கும் 6ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு கோரியே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொழும்பு மாவட்டத்தில் உள்ள சகல மின்சார சபைக்கிளைகளையும் சேர்ந்த ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் இந்த மறியற் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

இலங்கை மின்சாரசபையை தனியார் மயமாக்க எடுக்கும் முயற்சிகள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, அத்தியாவசிய பொருள்களின் விலையேற்றம் என்பவற்றுக்கெதிராகவும் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் குரல் எழுப்பினர். இலங்கை மின்சாரசபையின் தொழிலாளர் சங்கங்களின் ஒன்றியம் இந்த மறியற்போராட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதேவேளை மின்சாரசபை ஊழியர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக மின்சாரசபை நிர்வாகத்திற்கு 8 கடிதங்கள் அனுப்பியுள்ளபோதும் அதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் எனவே நாளை சனிக்கிழமை 23 தொழிற் சங்கங்கள் இணைந்து நாடு பூராவும் தேசிய எதிர்ப்புத் தினத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் தொழிற் சங்க ஒன்றியப் பொதுச் செயலாளர் பிரியந்த விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

## தென்மராட்சியில் உயிரிழந்த வயோதிபர்கள் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டு தகனம்

சாவகச்சேரியில் மக்கள் இடம் பெயர்ந்த பகுதிகளில் உறவினர்களினால் கைவிடப்பட்ட மூன்று வயோதிபர்கள் உயிரிழந்த நிலையில் அவர்களின் சடலங்கள் அநாதரவாகக் காணப்பட்டதாக வன்னித் தகவல்கள் தெரிவித்தன.

இந்த மூன்று வயோதிபர்களின் சடலங்களும் பின்னர் அடையாளம் காணப்பட்டு புலிகளின் காவல் துறையினரால் தகனம் செய்யப்பட்டதாக வவுனியாவுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

சாவகச்சேரி தபால்கந்தோர் வீதியைச் சேர்ந்த தம்பிஐயா அல்லது கிளிச்சாத்திரி என்பவர் ஷெல் வீச்சுக் காயங்களுக்கு இலக்காகியும் -

கச்சாய் வீதியைச் சேர்ந்த கந்தையா கனகசுந்தரம் மற்றும் டச்சு வீதி, ஐங்கரன் பேக்கறி பகுதியைச் சேர்ந்த திருமதி நாகலிங்கம் சிதம்பரம் ஆகிய இருவரும் நோய்வாய்ப்பட்டு தகுந்த பராமரிப்பு இன்றியும்-

உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மூவரது சடலங்களும் உறவினர்களிடம் கையளிக்க முடியாத நிலையில்கடந்த 14ஆம்திகதி தகனம் செய்யப்பட்டன. (ஐ-9)

## இன்றறக்ட் ஒன்றிய கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜுலை28

. யாழ்ப்பாணம் இன்றறக்ட் ஒன்றியத்தின் கூட்டம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கஸ்தூரியார் வீதியில் உள்ள அருண்ஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இன்றறக்ட் கழகங்கள் உள்ள பாடசாலைகள் தமது கழகப் பிரதிநிதிகளை இந்தக் கூட்டத்துக்கு அனுப்பிவைக்கும்படி யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகத்தினர் கேட்டுள்ளனர். எதிர்வரும் காலங்களில் ஒன்றியத்தின் செயற்றிட்டங்கள் தொடர்பாக இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. செயற்குழுத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

## ரயில்வே ஊழியர்களின்

# சம்பள உயர்வுக் கோரிக்கை பௌஸி நிராகரித்தார்!

கொழும்பு,ஜுலை28

மாதாந்த சம்பளத்தை மூவாயிரம் ரூபாவால் அதிகரிக்கும் படி ரயில்வே ஊழியர்கள் சங்கத்தால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி நிராகரித்துள்ளார்.

இன்று வெள்ளிக்கிழமை அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நடத்தப்போவதாக ரயில்வே ஊழியர்கள் விடுத்திருந்த எச்சரிக்கை தொடர்பாக சங்கப்பிரதிநிதிகளுடன் அமைச்சர் நேற்று முன்தினம் பேச்சுக்களை நடத்தினார்.

சங்கம் முன்வைத்த கோரிக்கைகள் ஏழாயிரம் அரச ஊழியர்களின் பொதுப்பிரச்சினை என்றும்-

ரயில்வே ஊழியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை அரசாங்கம் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் -

இதில் ரயில்வே ஊழியர்களுக்கு மாத்திரம் இச்சலுகையை வழங்குவது அமைச்சினால் முடியாது என்றும் -

சங்கப்பிரதிநிதிகளிடம் அமைச்சர் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9)

# உங்களால் இயன்ற அளவு பிறருக்கு நன்மை செய்யுங்கள்

★ நீ உயர்வடைய வேண்டுமானால் உன்னை மிகவும் தாழ்ந்தவனாகவே எப்போதும் கருது; 'நான் மேலானவன்' என்று நினைத்து கர்வம் கொள்ளாதே.

சிறந்தவன் என்று எண்ணுகிற எண்ணத்தால் உயர்வடைய முடியாது.

ஆதலால் உன் மனதில் எப்போதும் தாழ்மை இருக்கட்டும். பணிவு இருக்கட்டும்.

★ நீ தேடிய பொருளை வேறு ஊருக்குக் குடிமாறிப் போகும்போது உன்னுடன் கொண்டு போகிறாயன்றோ? இந்த உடம்பை விட்டு நீ புறப்படும்போது உன் செல்வம் உன்னுடன் வர வேண்டாமா? வர வேண்டுமென்றால் தர்மம் செய். "எங்காயினும் வரும் ஏற்றவர்க்கு இட்டது."

பூஜை செய்யும் நேரம் உன்னுடைய நேரம்; தர்மம் செய்த பணம்

**ஞானக்கதிர்**

உன்னுடையது; நீ செய்த அறம் கட்டமுதுபோல் உனது பெரிய யாத்திரையில் இனிது உதவுகிறது.

★ விபூதி தரிப்பதால் பாவத்திலிருந்து ஒருவன் விடுபடுகிறான். விபூதி தரிப்பதால் பூதப்பிரேத பிசாசு முதலியவை அஞ்சி நடுங்கி அலறியோடுகின்றன என்று மானவ புராணம் கூறுகிறது.

★ பிறருடைய உடைமையோ, உயிருள்ள பொருளோ நமக்கு எட்டிக்கனி போல கசக்க வேண்டும். பிறர் பொருளை விரும்புதல் கூடாது. பிறகு தன் பொருளில் வைக்கும் பற்றையும் அறவே அகற்ற வேண்டும். இதுதான் பிறவிப் பிணியை மாற்றும் மார்க்கமாகும்.

★ வீரமும் புகழும் இல்லாமல் நெடுங்காலம் இருப்பதைவிட, வீரமும் புகழும் பெற்றுச் சிறிது காலம் வாழ்வது சிறந்தது.

★ நீ வயலில் எந்த விதையை விதைக்கிறாயோ அந்த விதைதான் விளைந்த உன் வீட்டிற்கு வரும். கம்பை விதைத்துவிட்டு, கோதுமையை எதிர்பார்க்கக்கூடாது. கருவேலை நட்டுவிட்டு சந்தன மரத்தைப் பெற முடியாது.

அதுபோல நீ நன்மை செய்தால் உனக்கு நன்மையே வரும். தீமையைச் செய்தால் தீமையை அனுபவிப்பாய்.

★ நீ பிறருக்குத் தீங்கு செய்யாமல் இருந்தால் மட்டும் போதாது. நன்மையும் செய்ய வேண்டும்.

வேம்பு, எட்டி, வேல் முதலிய மரங்களும் மருந்துக்கும் விறகுக்கும் பயன்படுகின்றன.

எப்போதும் முடிந்த அளவில் பிறருக்கு உபகாரம் செய், மன வாக்குக் காயங்களால் ஒல்லும் வகையால் செய்.

**திருமுருக கிருபானந்தவாரியார்**

★ ஆசையின்றி, பயன் கருதாமல் மக்களுக்குச் சேவை செய்தால் புகழ் தானே வரும். புகழுக்கு ஆசைப்படக் கூடாது மலரை நாடி வண்டுகள் வருவதுபோல பற்றற்ற சேவையால் புகழ் தானே வரும்.

★ உலகில் நன்றி கொன்றவன் தான் மிகவும் கொடியவன், நன்றி மறவாதவனே மிகவும் நல்லவன்.

உலகில் சிறந்த பொருள் அன்பு, தாழ்ந்தது தனக்கென்று யாசிப்பது.

*நன்றி: ஸ்ரீராமகிருஷ்ண விஜயம்.*

## நகர மண்டப குண்டுவெடிப்பு:

# 4 சந்தேகநபர்களுக்கும் தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு நகரமண்டபக் குண்டு வெடிப்புச்சம்பந்தமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பைச் சேர்ந்த நான்கு பேரையும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி ஜி.டி குலத்திலக்கா உத்தரவிட்டார்.

ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் எனக் கூறப்படும் சின்னத்தம்பி கதிர்காமர், கே.விக்னேஸ்வரன், ரி.பப்டிஸ், சத்தியமூர்த்தி ராஜன் ஆகியோரே மேலும் விளக்க மறியலில் வைக்கப்பட்டனர்.

நகரமண்டப குண்டுவெடிப்பு விசாரணைகள் முடிவடையும் வரை 12 பேரைத் தாம் தடுத்து வைத்திருப்பதாகவும் மேலும் ஐவரை விளக்கமறியலில் வைத்துள்ளதாகவும் அவர்களில் தற்கொலைக் குண்டுதாரியின் தாயாரும் சகோதரியும் அடங்குவர் என்றும் பொலீஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்திருந்தனர்.

தற்கொலைக் குண்டுதாரியின் தாயாருக்கும் சகோதரிக்கும் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவர்களை விடுவிக்குமாறும் அவர்களின் சட்டத்தரணி வாதிட்ட போதிலும் அவர்கள் விடுவிக்கப்படவில்லை. அவர்கள் குறித்த தனியான அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணை ஓகஸ்ட் 18ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. கொழும்பு நகரசபைக் குண்டு வெடிப்பில் பல பொலீஸ் உத்தியோகத்தர்கள் பலியானதுடன் ஜனாதிபதி சந்திரிகாவும் காயமுற்றார்.

(அ-க)

## கடற்றொழில் அபிவிருத்திக்கு

# நிதி ஒதுக்குவதற்குப் பின்னடிப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 28

யாழ். மாவட்டத்தில் கடற்றொழில் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்கு இந்த வருடத்திற்கு நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை என்று தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்றொழில் நீரியல் வள அமைச்சினால் 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்ட போதும் இந்த நிதியாதுகாப்பு அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழில் கிராமங்களில் வீதிகள் புனரமைப்பு, பொது மண்டபம், இளைப்பாறு மண்டபம் அமைத்தல் உட்பட பல்வேறு திட்டங்களை ஆரம்பிப்பதற்கு இவ்வருடத்தில் திட்டமிடப்பட்டது.

இதற்கு 60 லட்சம் ரூபா செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது இந்த நிதியினை வழங்குவதற்கு அமைச்சு பின்னடித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படாமையினால் கடற்றொழில் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளமுடியாத நிலையேற்பட்டுள்ளது. (ஐ-5)

## வடமராட்சிப் பகுதியில்

# தொலைபேசி அழைப்புப் பெற பொதுமக்கள் முண்டியடிப்பு!

வடமராட்சி, ஜூலை 28

உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைபேசிச் சேவையைப் பெற வடமராட்சிப் பகுதி மக்கள் முண்டியடித்து வருகின்றனர்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வடமராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் முதல் மோட்டோறோலா தொலைபேசி இணைப்பு பலருக்குக் கிடைத்துள்ளது. இதனையடுத்து, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உள்ள தமது உற்றார் உறவினர்களுடன் உரையாட தொலைபேசிச் சேவையைப் பெற்றுக் கொள்ள மக்கள் தொலைத் தொடர்பு நிலையங்களில் குழுமிக் காணப்படுகின்றனர். (ஐ-173)

## கலந்துரையாடல்

யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ளது.

பரீட்சை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்துப் பொதுக்கலை மாணவர்களையும் இக்கலந்துரையாடலுக்கு சமுகம் அளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது (க)

# தந்தை அடித்து மகனின் உடலில் 93 காயங்கள்!

கொழும்பு, ஜூலை 28

தந்தை ஒருவர் தனது பத்து வயது மகனைத் தாறுமாறாக அடித்து மகனின் உடலில் 93 காயங்களை ஏற்படுத்தியுள்ளார்.

இச் சம்பவம் கம்பளை ஐயமாலபுர பகுதியில் இடம்பெற்றிருக்கிறது. சம்பவத்தை அடுத்து கம்பளைப் பொலிஸார் தந்தையைக் கொலை முயற்சிக் குற்றச்சாட்டின் கீழ் கைது செய்து கம்பளை மாவட்ட நீதிபதி குணரட்ன முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இது குறித்து விசாரணையின் போது தெரிய வந்ததாவது:-

சிறுவனின் தாய் வேலைவாய்ப்புப் பெற்று மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்றுள்ளார். இதனைத் தொடர்ந்து குறித்த தந்தை தனது மகனைப் பல முறை அடித்துத் துன்புறுத்தியுள்ளார். அதனால் மகன் தனது பாட்டி வீட்டில் சென்று பலநாள் தங்கியிருந்துள்ளார். தந்தையோ பாட்டி வீட்டுக்குச் சென்று அடிக்கமாட்டேன் என்று கூறி மகனை மீண்டும் அழைத்து வந்துள்ளார்.

ஆனால் சம்பவதினம் மகனைத் தாறுமாறாக அடித்த தந்தை மகனது உடலில் 93 காயங்களை ஏற்படுத்தியுள்ளார்.

கம்பளை மாவட்ட வைத்திய அதிகாரியின் வைத்திய அறிக்கையில் மகனின் உடலில் 93 காயங்கள் இருப்பதாகவும் மேலும் தாக்கப்பட்டிருந்தால் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மேல் விசாரணையை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை நீதிபதி ஒத்திவைத்துள்ளார். (க-6)

## வலி. மேற்குப் பகுதியில்

# சட்ட விரோதமாக மாடுகள் வெட்டப்படுவது அதிகரிப்பு

மூளாய், ஜூலை 28

வலிகாமம் மேற்கில் சட்ட விரோதமாக இறைச்சிக்காக மாடுகள் வெட்டப்படும் சம்பவங்கள் பரவலாக இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு இதுவரை நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

அண்மைக் காலமாக இவ்வாறு சட்ட விரோதமாக மாடுகள் வெட்டப்பட்டு இறைச்சி வியாபாரம் மேற்கொள்ளப்படுவது அதிகரித்துள்ளது. இவ்வாறு வெட்டப்படும் மாடுகளின் கழிவுப் பொருள்கள் கண்டபடி ஆங்காங்கே வீசப்படுகின்றன. இதனால் சுற்றுப் புறச்சூழல் பெரிதும் பாதிப்படைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் சம்பந்தமாக வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் விரிவாக ஆராயப்பட்டது. இப்பகுதிகளில் சட்ட விரோதமாக மாடுகள் வெட்டப்படுவதையும் இதனால் சூழல் மாசுபடுத்தப்படுவதையும் இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பிரதிநிதி ஒப்புக் கொண்டார். இவ்விடயத்தில் விழிப்பாகச் செயற்பட்டு பொருத்தமான தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்படி பிரதேச செயலர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டார். (ஐ-99)

# விவசாயத் திட்டம் ஆரம்பிக்க ஏற்பாடு

நெல்லியடி, ஜூலை 28

தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் நலன் கருதி, 'கெயர்' நிறுவனம், கால போகத்தில் தீவிர விவசாயத் திட்டம் ஒன்றை நடைமுறைப் படுத்தவுள்ளது.

இந்த விவசாயத்திட்டத்திற்கு கிராமசேவை அலுவலர்கள், கமக்காரர் அமைப்புக்கள் போன்றவைகள் ஒத்துழைப்பு வழங்கினால், இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் மரக்கறிச் செய்கையை ஊக்குவிக்க முடியும் என்று 'கெயர்' நிறுவன செயல் திட்ட இணைப்பாளர் எச். ஏ. அருளானந்தம் தெரிவித்தார். (ஐ-109)

# உதவிப் பொருள்கள் வழங்கப்படும்

நெல்லியடி, ஜூலை 28

தென்மராட்சிப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதியில் உறவினர்கள் நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் மக்களுக்கு, அவ்வப்பகுதி கிராம சேவை அலுவலர்கள் ஊடாக 'கெயர்' நிறுவனம் சமையல் பாத்திரங்கள், உடுபுடைவைகள், படுக்கை விரிப்புகள், போன்றவைகளை வழங்கி வருகின்றது.

இன்று வெள்ளி காலை 9 மணிக்கு புலோலி வடக்கு (ஜே/407) கிராம சேவை அலுவலர் பிரிவில் தங்கியுள்ள மக்களுக்கு இப்பொருள்கள், கிராமசேவை அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்படும். (ஐ-109)

# அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கீடு

வேலணை, ஜூலை 28

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வதற்கென 2000 ஆம் ஆண்டு பிரமாண அடிப்படையிலான மூலதன நிதியாக சுமார் 10 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிதியிலிருந்து பின்வரும் அபிவிருத்திப் பணிகள் நிறைவேற்றப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

★ சரவணைப் பகுதியில் சுடலை மடம் அமைத்தல்,

★ அம்பிகை நகர்ப் பகுதியில் சிறுவர் பாடசாலை அமைத்தல்.

★ சரவணைப் பகுதியில் விதானையார் வீதி திருத்தம்,

★ நயினாதீவுப் பகுதியில் குடலைப்பே வீதி திருத்தம்

★ புங்குடுதீவு உப அலுவலகப் பணிமனையில் மலசலகூடம் திருத்தம்.

★ சின்னமடு திருவள்ளுவர் சனசமூக நிலையம் புனரமைப்பு. (ஐ-165)

## வேலணைப் பகுதிக்கான

# மின் விநியோக நேரத்தை அதிகரிக்கக் கோரிக்கை

வேலணை, ஜூலை 28

வேலணைப் பகுதிக்கான மின்சார விநியோக நேரத்தினை அதிகரிக்குமாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் ந. கருணாகர குருமூர்த்தி மின்சார சபையின் வட பிராந்திய பிரதிப் பொது முகாமையாளரிடம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தமது கோரிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

வேலணைப் பகுதியில் தற்பொழுது மாலை 7.00 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரையும் காலை 5.00 மணி தொடக்கம் 6.30 மணி வரையுமே மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது. அதிகாலையில் வழங்கப்படும் மின்சாரம் காலை 6.30 மணியுடன் நிறுத்தப்படுவதால் அரச அலுவலகங்களில் உள்ள போட்டோஸ்ரட், றோணியோ போன்ற அலுவலகப் பாவனை இயந்திரங்கள் இயக்க முடியாதுள்ளது. இதனால் அலுவலக நடவடிக்கைகள் காலதாமதமாகின்றன. அத்தோடு வேலணை கிராமிய வைத்திய சாலையிலுள்ள குளிரூட்டிகளில் மருந்து வகைகளைப் பழுதடையாதவாறு பாதுகாப்பதற்கும் பகல் வேளையில் மின்சாரம் அவசியமாகின்றது. எனவே காலை 10.30 மணி தொடக்கம் பிற்பகல் 2.30 மணி வரைக்குமாவது மின் விநியோக நேரத்தினை அதிகரிக்குமாறு கோருகிறோம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-167)

## வாசகர் திருமுகம்

# உண்மையின் அடிப்படையில் நியமனங்களை வழங்குங்கள்!

யாழ். மாவட்டத்தில் ஆரம்ப நெறிக்கு விண்ணப்பித்தமாணவர்கள் ஆசிரிய பதவிக்குத் தெரிவு செய்யப்படாததை எதிர்த்து முறைப்பாடு செய்தனர். முறைப்பாட்டை ஏற்று ஆரம்ப நெறிக்கும் ஏனைய நெறிகளுக்கும் ஆசிரியர்களைத் தெரிவதற்கான நேர்முகப்பரீட்சைக்கு பெயர் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானவர்கள், கற்பவர்கள் பெரும் பகுதியினர் மற்றவர்கள் 200 க்கும் 180 க்கும் இடைப்பட்ட புள்ளி பெற்றவர் என இனங்காணப்படக் கூடியதாக உள்ளது.

ஆசிரிய பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட போது உயர்தரத்தில் பல்கலைக்கழக வெட்டும் புள்ளிக்கு குறைந்த புள்ளிகளைத் தொடக்க புள்ளியாகக் கொண்டவர்களின் உயர் புள்ளிகளில் இருந்து ஆசிரிய பதவிக்கானவர்களைத் தேர்ந்தெடுப்பதாகக் கூறப்பட்டது. அது நடை பெறவில்லை.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் பல்கலைக்கழகத்தில் முழுநேரக் கல்வி கற்கும் மாணவர்கள். பல்கலைக்கழகச் சட்டத்தின்படி அங்கு கற்பவர்கள் கற்கும் காலத்தில் வேறு கற்கை நெறிகளுக்கோ வேலைக்கோ சேர முடியாது. இது கண்டிப்பானது. இப்படியிருக்க இவர்கள் தெரிவு செய்யப்பட்டு ஆசிரிய பதவி எப்படி வழங்கப்படும்? அவர்கள் ஆசிரிய பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் பாடசாலைக்குத் தினமும் செல்லவேண்டும். அதேபோல் பல்கலைக்கழகத்தில் கற்கை மேற்கொள்ள வேண்டும். இது சாத்தியமா? சட்ட ரீதியாக ஏற்றுக் கொள்ளக் கூடியதா? பல்கலைக்கழகமும், கல்வித் திணைக்களமும் அனுமதிக்கின்றனவா? கல்வி மான்களும் அதிகாரிகளும் இந்த ஊழல் நடவடிக்கைக்கு உடந்தையாகப் போகின்றனரா?

கடந்த காலத்தில் நடந்த எழுதுவினைஞர் தேர்விலும், ஆசிரியர் தெரிவுப் பரீட்சையிலும் சித்தியடைந்து தொழில்களைப் பெற்று இருப்பவர்கள் பல்கலைக்கழகத்தில் கற்பவர்களாக பெரும்பான்மையோர் உள்ளனர். வேடிக்கை அவர்களில் சிலர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலும் பயிற்சி பெறுகிறார்கள். இரண்டு கற்கை நெறிகளை ஒரே நேரத்தில் மேற்கொள்ளுகிறார்கள். இவர்கள் தங்களைப் புத்திசாலிகளாகக் கொள்ளும் பச்சை சுயநலவாதிகள்.

பல்கலைக்கழக வெட்டுப்புள்ளிகளுக்குக் கீழ் 200 புள்ளிகளுக்கு மேல் உள்ளவர்கள் ஆசிரிய பதவி பெறத் தகுதியற்றவர்களா? யார் தீர்மானித்தது? அவர்களுக்கு படிக்க வசதியளிக்கப்படவில்லை. தொழில் பெறும் வாய்ப்பும் மறுக்கப்படுகின்றது. இது அடிப்படை மனித உரிமையைப் பறிக்கவில்லையா?

நேர்முகப் பரீட்சை நடத்தும் அதிகாரிகள் கண்ணை மூடிக்கொண்டு பரீட்சை நடத்தாது உண்மைகளைக் கண்டு பிடித்து உரிய முறையில் தொழில் வழங்க உதவ வேண்டும். இந்த முறைகேடான செயல்கள் பலரைப் பாதிக்கின்றன. பலருக்கு கெட்ட பெயர்களை உருவாக்குகின்றன பலரைப் பிழையான செயற்பாடுகளுக்கு ஊக்குவிக்கின்றன. சமூகமே பாதிக்கப்படுகிறது.

பல்கலைக்கழகம், கல்வித்திணைக்களம், அரச திணைக்களங்கள், அரச அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், கல்வி மான்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட — கிழக்கு மாகாண ஆளுநர் என்போர் முறைகேடுகளைக களைய மனச்சாட்சியையும் சட்ட விதிகளையும் கையில் ஏந்தி உயர்த்திப் பிடித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். செய்வார்களா?

தற்போது நடைபெறும் ஆசிரிய பதவிக்கான நேர்முகப் பரீட்சை இடைநிறுத்தப்பட்டு உண்மையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு — பல்கலைக்கழகத்தில் கற்காதவர்களுக்கு — தொழில் வழங்கப்பட வேண்டும்.

எல்லாம் எமக்கல்ல; மற்றவர்களும் வாழவேண்டும்.

வ. சின்னத்தம்பி

பருத்தித்துறை.

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஜெகசோதி செல்லப்பா ஆகிய எனது தேசிய அ. அ. (இல. 336120152 V), வி.அ. அ. (இல. 0907020705) என்பன 21 - 07 - 2000 அன்று மானிப்பாய்க்கும் வட்டுக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 3 ஆவது ஒழுங்கை உடுவில், மானிப்பாய் வீதி, மருதனார்மடம், சுன்னாகம். என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

(76745)

### மோட்டார்சைக்கிள் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள Yamaha Newsmate - 50 மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 351, கோவில் வீதி, நல்லூர். (துர்க்கா மணிமண்டபம் அருகில்) (76746)

### இலகு திருமண சேவை

1967 அவிட்டம், செவ்வாய் 7, A/L Diploma English படித்து ஜேர்மனியில் தொழில் புரிபவருக்குப் படித்த மணப்பெண் தேவை. Sponser உண்டு. மணமக்கள் தேர்வுக்கு நாடுங்கள் ஞாயிறுகளில் தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, K. K. S. வீதி, யாழ்ப்பாணம்.

(76679)

### மணமகன் தேவை

கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியையாகக் கடமையாற்றும் 29 வயதுடைய றோமன் கத்தோலிக்க அழகிய மணப்பெண்ணுக்கு உள்ளூரில் தொழில் புரியும் அல்லது சொந்தமாக வியாபாரம் செய்யும் மணமகன் தேவை. தொடர்பு: விளம்பர இல. 1067 C/o உதயன். (76762)

## ஆரம்ப நெறி ஆசிரியர் தெரிவில் பாதிப்புற்றோருக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 28

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் ஒன்று கூடுமாறு சங்கத்தலைவர் பா. மணிவண்ணன் கேட்டுள்ளார்.

அன்றைய தினம் அங்கத்தினரின் வரவு உறுதிப்படுத்தப்படுவதுடன் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவை நேரடியாகச் சந்தித்துப் பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது (சு)

## திருப்பலியின் பின் அனுமதி அட்டை வழங்கல்

யாழ்ப்பாணம் புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்திலிருந்து ஜி. சி. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இன்று வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதால் சம்பந்தப்பட்ட மாணவர்கள் அனைவரையும் இன்று காலை 8 மணிக்கு பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அதிபர் அறிவித்துள்ளார்.

யாழ். மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின் அதிபர், ஆசிரியர்களின் ஆசீர்வதிப்புடன் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். (சு)

## அருள் ஆசி கூறுகிறேன்

'கலாபூஷணம்' என்னும் சிறப்பு விருது வாங்கிய நாதஸ்வர வித்துவான்

இணுவையூர்

### திரு. K. R. சுந்தரமூர்த்தி

அவர்களுக்கு இணுவில் விசாலாட்சி சமேத விஸ்வேஸ்வர சுவாமியின் திருவருள் கிடைக்க அருளாசி கூறுகின்றேன். சுபம்

பிரதமகுரு
தாணு வாசுதேவக் குருக்கள்
இணுவில்.

(76771)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம் 11 — 02 — 1941

மறைவு 29 — 06 — 2000

### திருமதி ஆயித்தர் திர்வியம்

(துன்னாலை மத்தி)

எமது குடும்பத் தலைவியின் மறைவின் போது, பங்குகொண்டு ஆறுதல் கூறியோர், உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் நன்றி கூறுவதுடன், நாளை 29 ஆம் திகதி நடைபெறவுள்ள அந்தியேட்டி சபீண்டீகரணக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வே. ஆயித்தர் குடும்பம்.

தாமரைக்குளம்,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(76766)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி

### குமாரசாமி சரஸ்வதி

(சிவாஸ் கிறீம் ஹவுஸ், உரிமையாளர்)

பிறப்பு 1928-10-13

இறப்பு 1999-08-08

**திதி: 28-07-2000 துவாதஷி**

அம்மா! நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்து சென்று ஆண்டு ஒன்று போனாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டுப்போகாது.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், ஊழியர்கள்

சிவாஸ் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(76741)

## வலி. கிழக்குப் பகுதியில்

# நாய்க் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

வலி கிழக்கு, ஜூலை 28

கோப்பாய்பகுதியில் நாய்க் கடிக்கு இலக்காவோர் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது.

கோப்பாய் ஆஸ்பத்திரியில் இந்த மாதம் மட்டும் 36பேர் நாயினால் கடியுண்ட நிலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை — கடந்த மாதமும் 31 பேர் நாயினால்கடியுண்டு சிகிச்சை பெற்றுள்ளனர்.

இப்பகுதிகளில் கட்டாக்காலி நாய்கள் கண்டபடி அலைந்து திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாய் கடித்தால் உடனடியாக ஆஸ்பத்திரிக்குச் சென்று தடுப்பூசியினை போட்டுக் கொள்ளுமாறு கோப்பாய் வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ - 180)

வலி. கிழக்கு, தென்பகுதி
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி

## குத்தகை அறிவித்தல்

### வெதுப்பகம்

மேற்படி சங்கத்தினால் கோப்பாய் வடக்கில் நடத்தி வந்த வெதுப்பகம் குத்தகை அடிப்படையில் வழங்கப்படவுள்ளது. இதனை குத்தகைக்குப் பெற விரும்புவோர் வாடகைக்கான கேள்வியை எதிர்வரும் 15 - 08 - 2000 ஆம் திகதிக்கு முன் எழுத்து மூலம் ''பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி'' என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வெதுப்பகத்திற்கான கேள்விக் கோரிக்கை'' எனக் குறிப்பிடப்படல் வேண்டும். 15 - 08 - 2000 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

– பொது முகாமையாளர்

நீர்வேலி.
2000 - 07 - 25

(சி/12328)

## மரண அறிவித்தல்கள்

### கணேசலிங்கம் நெல்லைலிங்கம் (ஜின்னா)

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கணேசலிங்கம் நெல்லைலிங்கம் (ஜின்னா) 26-07-2000 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசலிங்கம்—இராஜேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனும், சத்தியவதியின் அன்புக் கணவரும், கணேசலிங்கம், விஜயலிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சட்டத்தரணி வன்னியசிங்கம் (முன்னாள் கோப்பாய் M P) மற்றும் கோமதி ஆகியோரின் மருமகனும், குமாரலிங்கம் (சட்டத்தரணி, மட்டக்களப்பு) திருமதி பத்மினி கோபாலர் (இளைப்பாறிய ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவுஸ்திரேலியாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. அருணாசலம்.

திருமதி கோமதி வன்னியசிங்கம்,
இல. 71, றொபேட் குணவர்த்தன மாவத்தை,
கிருலப்பனை, கொழும்பு-6.
T. P. 077—305124

(76770)

### மு. இராஜகோபால்

அளவெட்டியைச் சேர்ந்த மு. இராஜகோபால் 25- 07- 2000 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

இவர்காலஞ்சென்ற கனகம்மாவின் கணவரும், கௌரி (இந்தியா), சந்திரா (U K.), இராசசவுந்தரி (இந்தியா), தனபாலராசா(ரூட்டோபிறிண்டர், கொழும்பு), கங்காதரன் (U K.), கதிர்காமசேகரன் (U K), நாகபூஷணி, கமலேஸ்வரி (U K.) ஆகியோரின் தந்தையாரும், காலஞ்சென்ற நாகராசா, சந்தானசாமி (U K.) இராஜேஸ்வரன் (இந்தியா), சந்திரிகா (U K) கனகமணி (U K), செல்வநேசன், இசைவீரசிங்கம் (U K), ஆகியோரின் மாமனாரும், குமரேசன் (இந்தியா), பாரதி, சுகந்தன், (U K.), அர்ஜுனா, ஆதித்தன், அரவிந்தன், ஹரன் (U K.), சுமங்கலி (U K.), தியாசன் (U K.) ஆகியோரின் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்:-
செ. செல்வநேசன்
(மருமகன்)
கொலிஜ் வியூ,
அளவெட்டி.

Mrs. C. Santhanasamy
96, Sydney Road,
Watford,
Herts WD 17 PY,
U K.
T. P: 01923225196

(76777)

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசம்
100,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

## விசேட பொதுக் கூட்டம்

நாளை 29-07-2000 காலை 10 மணிக்கு சமாச காரியாலயத்தில் நடைபெறவிருந்த விசேட பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணங்களினால் 05-08-2000 சனிக்கிழமை காலை 10.00மணிக்கு நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்/செயலாளர்

*வ.மா.க.தொ.கூ.ச.சமாசம்*
*100,பிரதான வீதி, யாழ்ப்பாணம்.*
(76784)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



உயர்திரு. பெரியார் தம்பிராஜா
(B.A., Dip. in Accty)
கணக்காய்வு அத்தியட்சகர்
(உள்ளூராட்சி அதிகாரசபைகள், யாழ். மாவட்டம்)

அவர்கள் 17-07-2000 அன்று சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்து சமாதான நீதிவானாகப் பதவி ஏற்றமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

* லிங்கன் மத்திய சனசமூக நிலையமும். நிலைய முன்பள்ளியும்
* ஆவரங்கால் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கம்
* ஆவரங்கால் கிழக்கு மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம்
* புதுவை ஆலடி முருகன் தேவஸ்தானம்
* கொக்கனை அருள்மிகு கற்பக பிள்ளையார் ஆலய பரிபாலனசபை
* எவறெஸ்ற் விளையாட்டுக் கழகம்
* லிங்கன் சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கம்
* பம்பல் நாடக மன்றம்

*ஆவரங்கால் கிழக்கு,*
*புத்தூர்.*
(76763)


## பகிரங்க அறிவித்தல்

### அழைப்புக் கட்டளை

இல. 16 பிரிவு 55 (1)

மல்லாகம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட நீதிமன்றத்தில்
மகேசன் பெண் பத்மவாணி
மே/பா செல்லத்துரை பெண் தவமணி
கட்டுவன்புலம்
தெல்லிப்பழை.

வழக்கு இல. எதிராக வழக்காளி

மணநீக்கம் 82

வேலாயுதம் மகேசன்
மே/பா முருகன் வேலாயுதம்
மேசன்
தச்சன்கட்டு வயிரவகோயிலடி
கரும்பகம்
மிருசுவில்.

எதிராளி

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளிக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

மணநீக்கம் 82

இந்த நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடிணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2000 ஆம் ஆண்டு 08 மாதம் 17 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட திகதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப் படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
அ.ஸ்ரீதேவி
பதிவாளருக்காக.
*மாவட்ட நீதிமன்றம்,*
*மல்லாகம்.*

*வரைபு:*
*எஸ்.பீ.சிவஞானம்*
*சட்டத்தரணி*
(76772)

## வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜூலை28

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 27ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/144075/A | 513/144101/A |
| 513/144101/B | 513/144101/C |
| 513/146401/A | 513/146401/B |
| 513/146468/A | 513/146468/B |
| 513/146485/A | 513/146485/B |
| 513/148292/A | 513/148292/B |
| 513/148292/C | 513/150349/A |
| 513/150349/B | 513/153239/A |
| 513/153239/B | 513/153239/C |
| 513/153359/A | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/138862/A | 512/138862/B |
| 512/144317/A | 512/144317/B |
| 512/144317/C | 512/144526/A |
| 512/144526/B | 512/144612/A |
| 512/144612/B | 512/144612/C |
| 512/144612/D | 512/144614/A |
| 512/144614/B | 512/144614/C |
| 512/144614/D | 512/144614/E |
| 512/144614/F | 512/144633/A |
| 512/144633/B | 512/144633/C |
| 512/144695/A | 512/144695/B |
| 512/144706/A | 512/144706/B |
| 512/144706/C | 512/144706/D |
| 512/144706/E | 512/144706/F |
| 512/144706/G | 512/149904/A |
| 512/149905/A | 512/150042/A |
| 512/150042/B | 512/150183/A |
| 512/150184/A | 512/152606/A |
| 512/152626/A | 512/152626/B |
| 512/152706/A | 512/152747/A |
| 512/152747/B | 512/152747/C |
| 512/152765/A | 512/152806/A |
| 512/152806/B | 512/152857/A |
| 512/152857/B | 512/152857/C |
| 512/152919/A | 512/152931/A |
| 512/152971/A | 512/152971/B |
| 512/152974/A | 512/152997/A |
| 512/153063/A | 512/153063/B |

### நல்லூர்

| | |
|---|---|
| 512/142918/A | 512/142918/B |
| 512/142918/C | 512/149937/A |
| 512/149937/B | 512/149937/C |
| 512/149937/D | 512/149983/A |
| 512/150010/A | 512/150010/B |
| 512/150175/A | 512/150240/A |
| 512/150270/A | 512/152659/A |
| 512/152659/B | 512/152697/A |
| 512/152697/B | 512/152697/C |
| 512/152697/D | 512/152844/A |
| 512/153008/A | 512/153009/A |
| 512/153009/B | 512/153010/A |
| 512/153010/B | 512/153010/C |
| 512/153010/D | 512/153049/A |
| 512/153049/B | 512/153049/C |
| 512/153049/D | 512/153059/A |
| 512/153059/B | 513/141819/A |
| 513/141819/B | 513/141830/A |
| 513/143909/A | 513/143948/A |
| 513/143948/B | 513/146289/A |
| 513/150508/A | 513/150508/B |
| 513/150613/A | 513/153210/A |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/138517/A | 513/141184/A |
| 513/141184/B | 513/141184/C |
| 513/141184/D | 513/143992/A |
| 513/146483/A | 513/148325/A |
| 513/150415/A | 513/152560/A |
| 513/152560/B | 513/153220/A |
| 513/153220/B | 513/153220/C |
| 513/153230/A | 513/153257/A |
| 513/153257/B | 513/153257/C |
| 513/153260/A | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/144150/A | 513/150318/A |
| 513/150318/B | 513/150495/A |
| 513/150495/B | 513/150495/C |
| 513/150495/D | 513/150586/A |
| 513/153486/A | |

### உடுவில்

| | |
|---|---|
| 513/146446/A | 513/150330/A |
| 513/150334/A | 513/150334/B |
| 513/150409/A | 513/150410/A |
| 513/150471/A | 513/150532/A |
| 513/150532/B | 513/150539/A |
| 513/150539/B | 513/153277/A |
| 513/153277/B | 513/153363/A |
| 513/153363/B | 513/153363/C |
| 513/153370/A | 513/153455/A |
| 513/153455/B | 513/153455/C |

## புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,ஜூலை28

கடந்த 20ஆம் திகதி மானிப்பாய்ப் பகுதியில் ஏற்பட்ட மோதலின் போது யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விக்னராஜா சிவபாலன் என்ற தமது உறுப்பினர் உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.


## குறைந்த கட்டணத்தில் நேரடி தொலைபேசி சேவை

இன்று முதல்.........யாழ். நகரில்
மிகக் குறைந்த கட்டணத்தில்
சகல நாடுகளுக்குமான......
நேரடித் தொலைத்தொடர்பு சேவை மட்டும
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.......

அம்பிகாபதி அழகு மாடம்,
*9ஏ, நவீன சந்தை உட்புறம்,*
*யாழ்ப்பாணம்.*
*தொலைபேசி இல:2084*
(76788)



உ

## வில்லூன்றி புனித தீர்த்தம் ஆடி அமாவாசைப் பெருவிழா

30-07-2000 ஞாயிற்றுக்கிழமை

✳ தீர்த்தோற்சவம்
காலை 6.45 மணி வசந்த மண்டபப் பூசை
காலை 8.00 மணி தீர்த்த வாரி
காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை தீர்த்தக் கட்டடத்தில் அனுக்கிரகம்
காலை 10.00 மணி சுவாமி கோயிலுக்கு எழுந்தருளல்

✳ பிதிர்க் கடன்கள்
*காலை 8.15 மணிக்கு தீர்த்தவாரி முடிந்தவுடன் பொதுமக்கள் தீர்த்த சங்கற்பம் செய்து தீர்த்தமாடவும் பிதிர்த் தர்ப்பணங்கள் செய்து கொள்ளவும் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.*

தர்மபரிபாலன சபை, வில்லூன்றி தேவஸ்தானம்.
பரிபாலனசபை, வில்லூன்றி புனித தீர்த்தம்.

*வில்லூன்றி.*
(76761)



இரு பிரிவுகள் ஆரம்பம்!

வினா-விடை வகுப்பும்
துரித மீட்டலும்

A/L 2001 LOGIC

எஸ், எஸ். மனோகரன்

பிரிவு 1 - சனி, ஞாயிறு 9.00 மணி
பிரிவு 2 - சனி, ஞாயிறு 12.00 மணி

*ஆரம்பம்: நாளை* **(29-07-2000)**

BEACON
வெலிங்டன் சந்தி,
யாழ்நகர்.
(76733)



## எம் இதயம் கவர்ந்த இதயனுக்கு எம் இதயக் குமுறல்கள்



அமரர் றோமான் அன்ரனி (இதயன்)
(கிராம சேவையாளர் தரம் 1, J/68, J/69)

குருநகர் ஐக்கிய கடலுணவு ஏற்றுமதியாளர் ஸ்தாபனத்தின் காப்பாளராகவும் அதன் துரித வளர்ச்சிக்கு ஊக்கத்துடனும் அக்கறையுடனும் அல்லும் பகலும் அயராது உழைத்து, ஆலோசனைகள் வழங்கி ஊக்குவித்தவரும் இதயன் என எல்லோராலும் அன்புடன் அழைக்கப்பட்டவருமான அமரர் றோமான் அன்ரனி (கிராம சேவையாளர் தரம் 1) அவர்களின் திடீர் மறைவு எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தியுள்ளது. அன்னாரின் மறைவு குருநகர் மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும்.

பொழிந்திடும் கண்ணீர் ஆறாய்ப் பெருகிட துயருற்றிருக்கும் அவரது மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஸ்தாபனத்தின் பேரால் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆன்மா இறைவனில் அமைதிபெற வேண்டுகின்றோம்.

*குருநகர் ஐக்கிய கடலுணவு*
*ஏற்றுமதியாளர்கள்*
(76758)

ஐ.தே.க. கோருகிறது

# அரசமைப்பு யோசனை முதலில் புலிகளுக்கும் மகாசங்கத்துக்கும்!

## அதன் பின்பே நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவேண்டும்

கொழும்பு,ஜூலை28

புதிய அரசமைப்பு யோசனைகளை மகாசங்கத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் சமர்ப்பித்து அவர்களின் கருத்துக்களை கேட்கவேண்டும். அதன்பின்பே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்.

இப்படி அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்றை ஐ.தே.க. செயற்குழு நிறைவேற்றியுள்ளது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்றுக் கூடிய செயற்குழு இது விடயமாக விரிவாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்துள்ளது.

இங்கு எடுக்கப்பட்ட முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ அரசமைப்பு யோசனைகளை மகாசங்கம், விடுதலைப்புலிகள், அரசியல் கட்சிகள், மதத்தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி அவர்களின் கருத்துக்களை அரசு அறியவேண்டும். அதன்பின்பே நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரவேண்டும்.

★ அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பேச்சுக்களில் ஐ.தே.க. தொடர்ந்து பங்குபற்றுவது .

★ பிரதான கட்சிகளுக்கு இடையே எட்டப்பட்டுள்ள இணக்கப்பாடு குறித்து மகாசங்கத்தினருக்கு விளக்குவது.

★ அரசமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டதும், உடன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிக்க வேண்டும். அதிகாரம் கொண்ட பிரதமர் முறையைக் கொண்டுவர வேண்டும். (இ-3-4-7)

**வழமையாக வெள்ளிதோறும் வெளிவரும் அதிரடி அரங்கு பகுதி இன்று வெளியாகவில்லை. நாளைய பதிப்பில் வெளிவரும்.**

### சிற்றி ஒவ் றிங்கோ.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாரத்தில் மூன்று தடவைகள் சேவையில் ஈடுபடவும் வாய்ப்புக் கிட்டியுள்ளதாகக் கூறப்பட்டது.

அதேசமயம் - 280 பயணிகளுடன் இந்தக் கப்பல் இன்று மாலை திருகோணமலையில் இருந்து பருத்தித்துறைக்குப் புறப்பட இருப்பதாக திருமலை பட்டணமும், சூழலும் பிரதேசசெயலர் வேலும்மயிலும் தெரிவித்தார்.

இதற்கிடையில -இந்தக் கப்பல் சேவை தொடர்பாக ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா நேற்று வடக்கு மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகார சபைத் தலைவர் மேஜர் ஜெனரல் சரத முனசிங்கவுடன் தொடர்பு கொண்டு பேசியதாகவும் - மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்க்க அவரிடம் கோரிக்கை விடப்பட்டதாகவும் - ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-3)

### பிரிட்டிஷ்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் வெளிவந்தன.

அரசியல் சர்ச்சையை ஏற்படுத்திய இரண்டுநாள்களில் அவர் திடீரென பிரிட்டனுக்கு பயணமானார். பிரிட்டிஷ் எம்.பிக்களுடன் நல்ல தொடர்புகளை வைத்திருக்கும் றொனி தமது செல்வாக்கைப் பயன்படுத்தி அவர்கள் மூலம் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளை - இப்போது லண்டனில் தங்கியுள்ள அன்ரன் பாலசிங்கத்தை - சந்திக்க முயற்சித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தப் பணியை செய்வதற்கென்று அவர் அரசாங்கத்தினால் அனுப்பப்பட்டார் என்றும் -

அரசு தயாரித்து உள்ள தீர்வு யோசனைகளை அன்ரன் பாலசிங்கத்திடம் கையளித்து, அவருடன் பேசி விடுதலைப புலிகளின் நிலைப்பாட்டை அறிவதே றொனி மேற்கொள்ளும் முயற்சிகளின் நோக்கம் என்றும் - தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (அ-3)

### இடத்துக்கிடம்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து தனியார் தொலைத் தொடர்பு நிலையங்களில் விசாரித்த போது, "ரெலிக்கொம்" நிறுவனம் புதிய கட்டணம் குறித்த விவரங்களைத் தமக்கு அனுப்பி வைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (இ-7)

### இடம்பெயர்ந்த......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவானந்தா கூறியதாவது:-

இடம் பெயர்ந்த மக்கள் அனைவருமே தம்முடன் எந்தவிதப் பொருள்களையும் எடுத்து வரமுடியவில்லை. அரச ஊழியர்களும் தமது உடைமைகளை இழந்துதான் வந்துள்ளனர். எனவே அவர்களுக்கு அரசாங்கத்துடன் கதைத்து இரண்டு மாதங்களுக்காவது நிவாரணம் பெற்றுக் கொடுப்பேன் என்று கூறினார்.

இந்த கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள், வலயக்கல்விப் பணிப்பாளர்கள், கல்வியியல் கல்லூரி பீடாதிபதி ஆகியோர் உட்பட பல அரச அதிகாரிகள் கலந்து கொண்டனர். (இ-5-9-173)

# மாவைக் கந்தன் ஆலய தேர்த் திருவிழா நாளை

## விசேட பஸ் சேவைக்கு ஏற்பாடு

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா நாளை காலை 10மணிக்கு நடைபெறவிருக்கிறது.

கடந்த 6ஆம் திகதி ஆரம்பமான காம்யோற்சவத்தில் நாளை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கின்றன.

தேர் உற்சவத்தில் பங்குபற்றும் பக்தர்களின் வசதியை முன்னிட்டு யாழ்.பஸ் நிலையத்திலிருந்து அதிகாலை 6 மணி முதல் விசேட பஸ் சேவையை வடபிராந்திய போக்குவரத்துச்சபை நடத்தவிருக்கிறது. பக்தர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மாவையில கூடும் பக்தர்களுக்கு காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர்களின் ஏற்பாட்டில் அன்னதானம் வழங்கப்படவிருக்கிறது.

ஆடி அமாவாசைத் தீர்த்தம் நாளைமறுதினம் கீரிமலையில் நடைபெறவுள்ளது. மாவையில் இருந்து காலை 9 மணிக்குப் புறப்படும் மாவை முருகன் தீர்த்தமாடிய பின்னர் நண்பகல் 1.30 மணிக்கு ஆலயம் திரும்புவார். (அ-க-3-86)

# ஈழத்துச் சிதம்பர புனித தீர்த்தத்தில் பிதிர்க்கடன் செய்ய அனுமதி

ஆடி அமாவாசை தினமான நாளை மறுதினம் ஈழத்துச்சிதம்பர புனித தீர்த்தக் கரையில் தீர்த்தமாடவும் பிதிர்க்கடன் செய்யவும் காரைநகர் கடற்படையினர் அனுமதி வழங்கியுள்ளனர்.

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆதீனகர்த்தாக்கள் காரைநகர் கடற்படை பொதுசன தொடர்பு அதிகாரியை மகஜர் மூலம் கேட்டுக் கொண்டதற்கிணங்க மேற்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

காலை 6 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை பக்தர்கள் புனித தீர்த்தக்கரையில் தீர்த்தமாட முடியுமென கடற்படையினர் அறிவித்துள்ளனர். வடபிராந்திய போக்குவரத்துச் சபை காரைநகர்சாலை யாழ்.பஸ் நிலையத்திலிருந்து தீர்த்தக் கரை வரை நேரடிபஸ் சேவையை நடத்தவுள்ளது.

கசூரினா பீச் என உல்லாசப் பயணிகளைக் கவரும் இத்தீர்த்தக் கரைக்கு சாதாரண நாள்களில் எவரும் அனுமதிக்கப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-73)

# இடம்பெயர்ந்தோருக்கான ரூ.2 ஆயிரம் நிவாரண நிதி

## டக்ளஸ் வழங்கி ஆரம்பித்து வைத்தார்

இடம்பெயர்ந்தவர்களுக்கான உடனடி நிவாரணமான 2ஆயிரம் ரூபா 21பேருக்கு யாழ்.நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவினால் நேற்று வைபவரீதியாக வழங்கப்பட்டது.

ஈ.பி.டி.பியின் யாழ். பிராந்திய தலைமைச் செயலகத்தில் வைத்து இந்த நிவாரண நிதி வழங்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி(பளை), மருதங்கேணி, சாவகச்சேரி ஆகிய இடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கான உடனடி நிவாரணமே நேற்று வழங்கப்பட்டது.

நேற்று முதல் கட்டமாக ஆரம்பித்து வைக்கப்பட்ட 2ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கும் திட்டம் தொடர்ந்து நடைபெறும் என்று ஈ.பி.டி.பி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வைபவத்தில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கே.வி.குகேந்திரன் (ஜெகன்), எஸ்.சிவதாஸன், யாழ்.அரசஅதிபர் க.சண்முகநாதன் உட்பட பல அரச அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### வவுனியாவில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் போராட்டம் இன்றும் இடம் பெறும் என்றும் -

மாணவரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்காதுவிட்டால் அடுத்த தவணை ஆரம்பத்திலும் இந்தப் பகிஷ்கரிப்புத் தொடரும் என்றும் - சிரேஷ்ட மாணவர்கள் தெரிவித்தனர். (இ-3)


STP COMPUTER WORLD

54A, Palaly Road, Kantharmadam, Jaffna. (TP:2674)

பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைகால வகுப்புக்கள்

ஆரம்பம் :பிரிவு1 ∅ 30-07-2000 காலை10.00 மணி
:பிரிவு2 ∅ 02-08-2000 காலை 9.00 மணி
பயிற்சி நெறி :Basic Computer Application
பயிற்சிக் காலம் :ஒரு மாதம்
பயிற்சிக் கட்டணம :600ரூபா மட்டும்

இப் பயிற்சி நெறி தொடர்ச்சியான விரிவுரைகளையும் செய்முறை வகுப்புக்களையும் உள்ளடக்கியிருக்கும்.

மாணவர்களின் வசதிக்கேற்றவகையில் தனிப்பட்ட வகுப்புக்களும் ஒழுங்குசெய்யப்படும்.

பயிற்சி நெறி முடிவில் நடத்தப்படும் மதிப்பீடுகளின் அடிப்படையில் தகுதி வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும்

(76783)

நாளை ஆரம்பம்!

A/L 2002

'செம்மையாக்கல்'

கணக்கீடு D.SAM

காலை 9 மணி

D.M.I யாழ்நகர்.

(C/12329)

BIT

முக்கிய பொதுக்கூட்டம்

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் BIT (BACHELOR OF INFORMATION TECHNOLOGY) கற்கை நெறிக்காக விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்குமான மிக முக்கியமான பொதுக் கூட்டம் ஒன்று 30.07.2000 திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 2.00 மணிக்கு எமது தலைமை அலுவலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விண்ணப்பித்த அனைத்து மாணவர்களும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்
IIS

100,மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (C/12337)

விதுஜா சுப்ப மாக்கற்

உள்ளூர், வெளியூர், நேரடி தொலைபேசிச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

உள்ளூர்: 070 212216

வெளியூர்: 0094 70 212216

விதுஜா சுப்ப மாக்கற்

இணுவில் சந்தி, இணுவில்

(76750)

கணக்காய்வுப் பரீட்சை

(AUDITING) - 2000

வியாபாரக் கணிதமும் புள்ளி விவரவியலும்

விரிவுரை ஆரம்பம்: 29-07-2000 சனிக்கிழமை 9.30 (ப.நே)

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி - யாழ்ப்பாணம்

(76722)

தேவை

எஸ்.பி.எம். கணனிப் பதிப்பகத்துக்கு சிறந்த பெண் கணனி இயக்குநர் உடன் தேவை. எஸ்.பி.எம். கணனிப் பதிப்பகம், வி.எம்.றோட், பருத்தித்துறை (யா/சித்திவிநாயகர் வித்தியாலயத்துக்கு அண்மையில்) என்ற முகவரிக்கு சுயவிவரங்களுடன் (சனி,ஞாயிறு 8-4 மணி நேரங்களில்) உடன் தொடர்பு கொள்ளவும்.

(76776) S.புவனேஸ்வரன்

நீங்கள்......!

- A\L பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்தவரா..............?
- 17 வயதுக்கு மேற்பட்டவரா.......?
- உங்கள் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கிறீர்களா.........?

ஆம் எனில் .........

கவலையை விடுங்கள்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் கணனிப் பட்டதாரி ஆகும் சந்தர்ப்பம் உங்களுக்காகவே.

மேலதிக விவரங்களுக்கு 30.7.2000 முன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்

நினைவிருக்கட்டும்

இலங்கையின் முதல் கணனி பட்டதாரி நீங்கள் தான்.....

IBMS

701, K.K.S. Road,

Jaffna.(near Jaffna Hindu College)

(C/12334)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.